விலை ரூபா 2-00

12 பக்கங்கள்

# ஈழநாடு

வாரமலர் EELANADU VARAMALAR

மலர் 27 கார்த்திகை 30 ரபி-ஆகி 2 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (15—12—85) இதழ் 308

க. பொ. த. சாதாரணம்

## தமிழ் விஞத்தாளில் சிங்களச் சொற்கள்

[மானிப்பாய்]

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற க. பொ. த. சாதாரணப் பரீட்சையின் சமூகக்கல்விப் பாட இரண்டாம்பகுதி விஞத்தாளில் சில சிங்களச் சொற்களும் இருந்ததால் தமிழ்ப் பரீட்சார்த்திகள் குழப்பங்களுக்குள்ளாஞர்கள்!

இந்த தமிழ் விஞத்தாளில் இருந்த சம உயரக் கோட்டுப் படத்தில் வடக்குப் பகுதியைக் குறிக்கும் சொல் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்தது. நதியைக்குறிக்கும் [12-ம் பக்கம் பார்க்க]

# சுவிஸ்தமிழ் அகதிகளுக்கு தெற்கில் அகதி முகாம் அமைக்க யோசனை!

(பெ. இராசரத்தினம்)

சுவிற்சர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 3500 இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தென்னிலங்கையில் அகதி முகாம்கள் அமைத்து அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து கொடுக்க சுவிஸ் அரசு யோசனை செய்து வருகின்றது. இது குறித்து ஆராயவென சுவிஸ் அரசாங்கத்தின் மூன்று பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்று இன்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வருகிறது.

சுவிஸ்சர்லாந்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளால் அந்நாட்டு அரசுக்கு நெருக்கடிநிலை தோன்றியுள்ளது. இதனையடுத்து அவர்களை தாயகத்துக்கு திருப்பி அனுப்பத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் சுமார் 3500 தமிழ் அகதிகள் இதற்கு ஆட்சேபித்துள்ளனர். வடக்கு—கிழக்கு தமிழ்ப்பகுதிகளில் தாம் பாதுகாப்பாக இருக்க முடியாதெனத் தெரிவித்துள்ளனர்.

அவர்களின் இந்த ஆட்சேபனையை அடுத்தே வடக்கு-கிழக்கிலல்லாது தென்னிலங்கையில் அவர்களைஅகதிமுகாங்களமைத்துப் பாதுகாக்க சுவிஸ் அரசாங்கம் யோசனை செய்து வருகிறது.

இது தொடர்பாக ஆலோசனை நடத்தவே சுவிஸ் அரச பிரதிநிதிகள் இன்று கொழும்பு வருகின்றனர். தென்னிலங்கையில் சுவிஸ் தமிழ் அகதிகளுக்கு அகதி முகாம்கள் அமைக்கப்படும் பட்சத்தில் இலங்கையில் சுமுக நிலை ஏற்படும் வரை அவர்கள் பாதுகாப்பு, மற்றும் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு சுவிஸ் அரசாங்கமே பொறுப்பாகவிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி-ய]

## இழப்பு இல்லை

[யாழ்ப்பாணம்]

வண்ணை வேங்கடேசப்பெருமாள் கோவிலுக்கு அண்மையில் இருந்த 'ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி[ஈ. பி. ஆர் எல். எவ்] முகாமில் போராளிகளையோ, ஆயுதங்களையோ இராணுவத்தினர் கைப்பற்றவில்லை என்று அதன் 'ஈழம் செய்திப் பலகை' சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'லங்கா புவத்' செய்திஸ்தாபனம் தெரிவித்த தகவல்களுக்கு மறுப்புத் தெரிவித்தே மேற்படி இயக்கம் இப்பதிலை அளித்துள்ளது. [மா]

## துப்பாக்கி வேட்டுக்கும், அஞ்சலிக் குண்டுக்கும் பலி!

[திருகோணமலை]

திருகோணமலை 6-ம் கட்டையடியில் உழவு யந்திரத்தில் சென்ற மூவரில் ஒருவர் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாஞர். அவரின் சடலம் அந்த இடத்திலேயே தீமூட்டப்பட்டது. மற்ற இருவரும் தப்பிஓடிஞர்கள். நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றது.

பற்றை மறைவில் மறைந்திருந்த ஆயுதப்படையினரே இத்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

அரைகுறையாக எரிந்த நிலையில் காணப்பட்ட சுடப்பட்டவரின் சடலத்தை அவரது சகாக்கள் மயானம் ஒன்றுக்கு எடுத்துச்சென்று தகனம் செய்யும் பொழுது அஞ்சலி செலுத்துவதற்கு வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் மேலும் ஒருவர் பலியாஞர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## பாதுகாப்பமைச்சில் அதிபர் ஹக் செய்தியாளர் மகாநாடு

(கொழும்பு)

பாகிஸ்தான் ஜஞதிபதி ஜெனரல் ஸியாவுல் ஹக் தமது ஐந்து நாள் இலங்கை விஜயத்தைமுடித்துக்கொண்டு இன்று தாயகம் திரும்புகிருர்.

ஜெனரல் ஹக் தமது பயணத்துக்கு முன்னர் பத்திரிகையாளர் மாநாடொன்றை இன்று காலை நடத்தவுள்ளார்.

இதுவரைஇலங்கையில்இவர் நடத்திய செய்தியாளர் மாநாடுகள் ஹோட்டல்களிலும் மற்றும் பொது இடங்களிலுமே இடம்பெற்றன.

ஆனல் இன்றைய மாநாடு இலங்கை பாதுகாப்பு அமைச்சத் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெறுகிறது. இம்மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

இலங்கையுடனுனஇராணுவ ஒத்துழைப்புக்குறித்து அவர் இம்மாநாட்டில் குறிப்பிடலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

மரண விசாரணை

## யாழ் பஸ் நிலையத்தில் சரமாரியாகச் சுட்டனர்!

(யாழ்ப்பாணம்)

''ஒருகவசவாகனம் இரண்டு ட்ரக்குகளில் வந்த இராணுவத்தினர் யாழ். பஸ். நிலையத்திற்குள் புகுந்து சரமாரியாகச் சுட்டார்கள். அங்கு நின்ற மக்கள் சிதறி ஓடிஞர்கள். பயத்திஞல் நானும் ஆஸ்பத்திரி பக்கம் ஓடினேன். இராணுவத்தினர் போனபின் திரும்பி வந்து பார்த்தபோது மின்சாரநிலைய வீதியில் இறந்தவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.''

அரியாலையைச் சேர்ந்த ஆறுமுகம் கிருஷ்ணபிள்ளை (65 வயது) என்ற வயோதிபரின் மரணவிசாரணையில் சாட்சியமளித்த க. தங்கராசா மேற்கண்டவாறு கூறிஞர்.

யாழ். பதில் நீதவான் க. கேசவன் நேற்று மரணவிசாரணை நடத்திஞர்.

அவர் மேலும் கூறியதாவது:-

''சம்பவதினம் நண்பகல் 12-30 மணியளவில் யாழ். ஆஸ்பத்திரி வீதி வழியாக பஸ் நிலையத்திற்கு நடந்து சென்றேன். அப்போது ஒரு கவசவாகனம், இரண்டு ட்ரக்குகளில் இராணுவத்தினர் பஸ் நிலையத்திற்குள் புகுந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்தார்கள். மக்கள் சிதறி ஓடிஞர்கள். நானும் பயத்திஞல் திரும்பி ஆஸ்பத்திரிக்கு ஓடினேன். அப்போதும் சுட்டுக் கேட்டது.

பிற்பகல் ஒன்றரை மணியளவில் யாழ். நகரிலிருந்து ராணுவத்தினர் திரும்பிச் சென்றுவிட்டனர். அதன்பின் நான் போய்ப் பார்த்தபோது மின்சாரநிலைய வீதியில் இறந்தவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். உடன் அவரின் மகனுக்கு அறிவித்தேன்.

இறந்தவரின் மகன் இ.தெய்வேந்திரன் சாட்சியமளிக்கையில் தமது சிறிய தகப்பனை தங்கராசா வந்து பஸ் நிலையத்திற்கு முன்ஞல் என் தந்தையை இராணுவத்தினர் சுட்டுவிட்டதாகவும், ஆஸ்பத்திரியில் அவர் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறிஞர்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் சாட்சியமளிக்கலாமென பதில் நீதவான் தெரிவித்துள்ளார்.

## 50 பேர் கைது

(திருகோணமலை)

திருமலையில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒரு வயோதிபரின் வாடகைக்காரும் சாரதியும் நேற்றுத் தாக்கப்பட்டதைத்தொடர்ந்து ஆயுதப் படையினர் மேற்கொண்ட சோதனையில் 50 பேருக்கு மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக கைதுசெய்யப்பட்டவர்கள், அன்புவழிபுரம், செல்வநயகபுரம் ஆகிய இடங்களைச்சேர்ந்தவர்களென்றும், அரச - கூட்டுத்தாபன-தனியர்துறையைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் என்றும் திருமலை பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது.

திருகோணமலை ஆஸ்பத்திரிக்குச் சென்ற வாடகைக் காரும் சாரதியுமே தாக்குதலுக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## கொள்ளைப்பொருட்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்).

கிளிநொச்சிக்கும் முறிசண்டிக்கு மிடையில் கடந்த 7ம் திகதி 'சலாம்ஸ்' ஸ்தாபனத்தாருக்குச்சொந்தமான லொறியில் கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) மீட்டுக்கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து அக்கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களை மீட்கும்வரை நிறுத்திவைக்கப்பட்டிருந்த யாழ்—கொழும்பு லொறி சேவையை மீண்டும் ஆரம்பிப்பதென முடிவு செய்துள்ளதாக யாழ்-கொழும்பு லொறிப்போக்குவரத்து ஒன்றியம் அறிவித்துள்ளதுடன், பொருட்களை மீட்டுத்தந்த 'புளொட்' இயக்கத்துக்கும், ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் நன்றி தெரிவித்துள்ளது. [மா]

## மட்டு. தபாலகத்தில் கொள்ளை

(கொழும்பு)

மட்டக்களப்பு பிரதம தபாலகத்தில் ரூபா 50 ஆயிரம் பணமும், முத்திரைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதேவேளை கிழக்குப்பகுதியில் மொரக்கொட்டாஞ்சேனை என்ற இடத்தில் நெல்சந்தைப்படுத்தும் திணைக்களத்தின் ஆலையொன்றும், ஊழியர் விடுதி, நிர்வாகக் கட்டிடங்கள் ஆகியன இனந்தெரியாதவர்களால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன. [கி]

## விஞத்தாள்களும் சோதனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கல்விப்பணிப்பாளர் பணிமனையிலிருந்து இ. போ. ச. பஸ்மூலம் பளைக்கு எடுத்துச்செல்லப்பட்ட ஜீ. சி ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான கேள்வித்தாள்கள் ஆனையிறவு இராணுவமுகாமின் முன்பாகப் பலத்த சோதனைசெய்யப்பட்டதாக புகார் கிடைத்துள்ளது.

அக்கராயன் பிரதேச கொத்தணி அதிபரும் ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான மாவட்ட இணைப்பு அதிகாரியுமான ஏ. கே இராசேந்திரம் ஆனையிறவு இராணுவ முகாமிற்குசென்று இராணுவஅதிகாரிகளைச் சந்தித்து நிலைமையை விளக்கியதனைத் தொடர்ந்து முகாமின் முன்பாக சோதனைசெய்யாது கேள்வித்தாள்களை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் இதுதவிர எவ்வித அசம்பாவிதமும் இன்றி கிளிநொச்சி, பளை, பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நேற்றுடன் முடிவடைந்தன.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய PL-4 ரக லேத் மெசின் விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். 2290

வலம்புரி சங்கு:தெய்வீக சக்திவாய்ந்த வலம்புரிச்சங்கு, ஆலய பூசை ஆராதனைக்கும், இல்லங்களில் இலட்சுமிகடாட்சம் நிலவுவதற்கும் மாபெரும் பொக்கிசம். உடன் விற்பனைக்குண்டு: தாஸ், மாணவர் அறப்பணி நிலையம். 59, மீனாட் அம்மன் வீதி, பண்ணை. 2319

Bairaha Farms புறொயிலர் குஞ்சுகள் 17-ந் திகதி, 24-ந் திகதி செவ்வாய்க்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்க. சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில். 2324

மிளகாய்த் தோட்டம் நாவற்குழி சந்தியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் மைலியா தோட்டப் பகுதியில் 11 பரப்பு மிளகாய்த் தோட்டம் [நடப்பட்டுள்ளது) விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளும் முகவரி: நாகலிங்கம் கனகரத்தினம், நாவற்குழி அல்லது 52, வைமன் வீதி, யாழ்ப்பாணம். (2350)

வீட்டுத் தளபாடங்கள், வெளிநாட்டுக் கிளாஸ் வகைகள், தையல் மெஷின், குளிர் சாதனப் பெட்டி, துவிச்சக்கர வண்டிகள், மிருதங்கம், ரி.வி, கஸற் றேடியோக்கள், உயர்தர வகுப்புக்காய வரலாற்றுப் புத்தகங்கள், இன்னும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு. சி. பத்மநாதன் C/O திரு. அம்பலவாணர், திருநெல்வேலி வடக்கு. [திருநெல்வேலிச் சந்திக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் இடையில் உள்ளது] [2371)

சட்டரிங் பலகைகள் 1400 சதுரஅடி (Shuttering planks), 225 மூட்டுத் தடிகள், தளபாடங்களுக்கேற்ற யாவறணைப் பலகைகள், 6 கதவு நிலைகள், 6 ஜன்னல் நிலைகள் ஆகியன சகாய விலைகளில் உடனே விற்பனைக்குள்ளன. வேலை நேரங்களில் தொடர்பு கொள்ளவும்: இல. 10, குறூசற் லேன், [கச்சேரி நல்லூர் வீதி], யாழ்ப்பாணம். [கச்சேரியிலிருந்து 150 யார்] [2370]

தெல்லிப்பழையில் பிரதான வீதியிலிருந்து 200 யார் தூரத்தில், 2 வீடுகள் கட்டக் கூடியதும், முதிர்ந்த பனைகளுடன் கூடியதுமான 10 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு பின்வரும் முகவரிகளில் ஒன்றில் தொடர்பு கொள்ளவும். சரு சேது சேவிஸ், சுன்னுகம் (ஜெற் மோட்டர்ஸ் அருகே) or Dyn Ads, 476, பிரதான வீதி, சுண்டிக்குழி [சென் ஜோன்ஸ் முன்பாக] [2369]

கோப்பாய் வடக்கில் விவசாயம் செய்யக்கூடிய 12½ பரப்புக்காணி, வீடு, நல்லதண்ணீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி. நவநாதன், பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். [2330]

விற்று தீர்ப்பதற்காக மலிவு விலையில் உள்நாட்டு, வெளிநாட்டு புடவை வகைகள் 16-12-85 முதல் 31-12-85 வரை விற்கப்படும். வியாபாரிகளும் தொடர்பு கொள்ளவும். வனஜா புடவை மாளிகை, (சுபாஸ்கபே முன்பாக) 144, மொடேர்ண் மார்க்கற், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2335

## விற்பனைக்கு

தெல்லிப்பழை ஸ்ரேசன் வீதியில் ஆஸ்பத்திரிமுன் ஒரு பரப்பு பன்னிரண்டு குழிகாணி விற்பனைக்குண்டு. கடை அல்லது வீடு கட்டலாம். விபரங்கட்கு:, T. K. துரைராஜசிங்கம், புகையிரத நிலையவீதி. தெல்லிப்பழை. 2338

மூளாய் பிள்ளையார் கோவிலுக்கு பின்புறமாக25½ பரப்பு வயற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:செ.இராமலிங்கம், சட்டத்தரணி, மல்லாகம். 2269

வவனியா நகரசபை எல்லைக்குள் மன்னார் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய அரிசி ஆலை விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எஸ். கே. எ. எட்வேட், வேப்பங்குளம், வவனியா. (2365)

ஈஸ்டேன், றலி [Eastern, Raleigh] ஆகிய பெண்களுக்குரிய சைக்கிள்கள் விற்பனைக்குண்டு. வி. சாமிநாதன், சங்கரப்பிள்ளை வீதி, மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை. [2377]

யாழ்ப்பாணம் மெயின் றேட்டிலிருக்கும் மானிப்பாய் சந்தைக்கு அருகாமையில் 2 பரப்பும், 9 குளியும், சுற்று மதிலும் கொண்ட காணி விற்பனைக்குண்டு. பரப்பு ரூபா 1 லட்சத்துப் பத்தாயிரம். தொடர்பு: செ. கங்காதரன், சந்தை வீதி, மானிப்பாய், [2295]

நாலு அடுப்பும் அவ்வனும் கொண்ட அமெரிக்கன் 'இன் வென்ரம்' எலக்ரிக் குக்கரும், ரூ இன் வன் றேடியோவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கணேசரட்ணம், நாச்சிமார் கோவிலடி, கூளாவடி, ஆனைக்கோட்டை. [2294]

வேலணை கிழக்கு அம்மன் கோவிலடி வெளிநாம்பிராய் எனது பெயரில் உள்ள 10 பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ம. செல்வநாயகம், [ஆனந்தம்] 44/2, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [2320]

போசனசாலைகளுக்கும் கல்வி கற்பிக்கும் இடங்களுக்கும் பாவிக்கக் கூடிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ஏ. இராசபச்சம், No118, பலாலி வீதி, திருநெல்வேலி. [2395]

### SALE

For Sale. One Month old Japanese Spicx. 8, Railway Quarters, Athiady, Jaffna. [2375]

## வாடகைக்கு

சகல நவீன வசதிகளுடன் வீடொன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: Dr.Mrs. அருளம்பலம், 12/1, அருளம்பலம் லேன், அரியாலை. (2264)

புலோலி மந்திகை அரசினர் வைத்தியசாலை அருகாமையில் சகல வசதிகளுடனும் உள்ள வீட்டில் ஓர் பகுதி வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: மு. கதிர்காமத்தம்பி, " கதிர் அகம்", துன்னாலை வடக்கு, கரவெட்டி. [2277]

## மணப்பந்தல்

யாழ். இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த 35வயது நிரம்பிய பயிற்றப்பட்ட ஆசிரியை (ஆங்கிலம்)க்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். ஆசிரியராகவோ, அல்லது அரசாங்கத்தில் வேறு தொழில் செய்பவராகவோ இருப்பின் விரும்பப்படுவர். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். ஜாதகப் பிரதியுடன் தொடர்பு கொள்ளவும்; விளம்பர இல. 2276, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2276

யாழ். இந்து வேளாள மணமகன் வயது 34, 5' 6'', 8ல் செவ்வாய், கிரகபாவம் 88½. கணக்காளர் [I. C. M. A - Inter] கொழும்பு பாரிய நிறுவனங்களில் பணி புரிந்தவர். மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்ல விரும்புவருக்கு 30 வயதுக்குட்பட்ட படித்த பண்பும் அழகுமுள்ள மணமகள் தேவை. உடனடியாக முதற் கட்டத்தில் சாதகக் குறிப்புடன் எல்லா விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல. 2397, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். [2397]

## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு பாராமரிப்பு வேலையும் மற்றும் கையுதவி வேலையும் செய்யக் கூடிய ஒருவர் தேவை. இரவில் தங்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும். நடுத்தர வயதுடைய/ஓய்வுபெற்றவர் விரும்பத்தக்கது. முன் அனுபவத்துடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2358, C/O ஈழநாடு. (2358)

இறைச்சிக்கான கோழிகள் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய இடம் அண்ணுபாம், [செம்மா தெருயும் மொஸ்க் லேன்] யாழ்ப்பாணம். கிளை: அண்ணு பாம், ஸ்ரேசன் றேட், இணுவில். உடன் தொடர்புகொள்ளவும். [2396]

இரும்புத் தொழிற்சாலை, கைத்தறி நெசவு நிலையம் முதலிய உபகரணங்கள் முழுமையாய் விற்பனைக்கு இருப்பின் தொடர்பு கொள்ளவும்: மு. கதிர்காமத்தம்பி, "கதிர் அகம்", துன்னாலை வடக்கு, கரவெட்டி. [2278]

### 1986 - ம் ஆண்டு யாழ். மாவட்ட அரச மரவேலைப் பாடசாலைகளின் ஒருவருட மரவேலைப் பயிற்சிக்கு பயிலுநர்களைச் சேர்த்தல்

சிறு கைத்தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்படும் யாழ்ப்பாணம், மானிப்பாய், சுன்னுகம் இயந்திர மரவேலைப் பாடசாலைகளிற்கு மேற் சொல்லப்பட்ட பயிற்சிக்காக ஆண் பெண் இரு பாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலும் விபரங்களிற்கு அண்மையில் உள்ள அரச மரவேலைப் பாடசாலை பொறுப்பதிகாரியையோ அல்லது சிறு கைத்தொழில் உதவிப் பணிப்பாளர், சச்சேரி, யாழ்ப்பாணத்திலோ நேரடியாகவோ கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி. 31-12-1985.

சி. ஆர். வேலாயுதபிள்ளை,
உதவிப்பணிப்பாளர்,
சிறு கைத்தொழிற் பகுதி,
கச்சேரி, யாழ்ப்பாணம்.
[2051]

### தேவை

சிங்கப்பூரில் வேலை செய்வதற்கு பணிப்பெண் வேண்டும். தொடர்பு கொள்ளவும்:க. கதிர்காமத்தம்பி, 231, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, யாழ்ப்பாணம். [2389]

### தவறிவிட்டது

சங்கரத்தை வட்டுக்கோட்டை விலாசம் கொண்ட மாணிக்கம் யோகராசா என்பவரின் அடையாள அட்டை இலக்கம் 6709121'9V யாழ்ப்பாணத்திற்கும் மானிப்பாயிற்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய விலாசத்தில் ஒப்படைக்கவும். [2384]

## சேவை

உங்கள் நிறுவனத்திலோ வீட்டிலோ, தட்டச்சு யந்திரங்கள் பழுதாகியிருப்பின் இன்றே எம்மிடம் உடன் தொடர்பு கொள்ளுங்கள். வீடுகளுக்கோ, நிறுவனத்துக்கு நேரில் வருகை தந்தும் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: நிர்வாகி N. தம்பிப்பிள்ளை, பூடோ என்றபிறைஸ், 39/17, மின்சாரநிலைய வீதி, 3-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [S. P. சாமி அன் கோ அருகாமையில்] [2387]

## ஏல விற்பனை

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலை [யாழ். பெரியாஸ்பத்திரியில் 20-12-1985 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குப் பாவனைக்குதவாத சத்திரசிகிச்சை உபகரணங்கள் (பற்சிகிச்சைக் கதிரைகள், பல் பிடுங்கும் குறடுகள், கிருமி நீக்கும் பாத்திரங்கள்,[ஸ்ரெறிலைசர்] ஏனையபல ஏலத்தில் விற்கப்படும்.

இவ்வுபகரணங்களைப் பார்வையிட விரும்புவோர் 19-12-1985 வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை சத்திரசிகிச்சை உபகரணங்கள் களஞ்சியத்தில் பார்வையிடலாம்.

வாங்கிய பொருட்களை உடன் பணம்செலுத்தி அன்று பி. பகல் 3-00 மணிக்கு முன்பு அப்புறப்படுத்தல் வேண்டும்.

எஸ். சிவலிங்கம்,
கணக்காளர்,
போதனு வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
அரசினர் போதனு
வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
12-12-85. [2385]

### கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம் பரந்தன்

### கேள்வி விண்ணப்பம் வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்தில் உள்ள வெற்றுச்சாக்குகளுக்கு கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் சாக்குகளை நேரில் பார்வையிட்டு, விண்ணப்ப வைப்புப் பணம் ரூபா 110/- (ரூபா. 100/- திருப்பி வழங்கப்படும்) செலுத்தி, விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூரணப்படுத்தி பதிவுத்தபால் மூலம் "பொது முகாமையாளர், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்" என்ற முகவரிக்கு 21-12-85 ற்குப் பிந்தாமல் (கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்ப விபரத்தினை எழுதி) அனுப்புதல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கம், பரந்தன்.
[2374]

## Piano for Sale

One owner 'Collard and Collard' English Piano in excellant condition.

41/5, Temple Road,
Jaffna

(2322)

சுப்பர் எயிட் எம் எம் (F) பில்மில் தயாரித்து முடிவுற்ற படம்

## வாழ்க்கை அலைகள்

எதிர்வரும் 15-12-85 தொடக்கம்
மூன்று தினங்கள் மட்டும் காண்பிக்கப்படும்.
இடம்:
திருநெல்வேலி Y. M. H. A. மண்டபம்
அன்பளிப்பு: 10/-, 5/- மட்டும். [2336]

## N. C E.- Feb., 1986

10 Model Papers on Listening Comprehension
Additional Grammar Classes.

Enrol before 18-12-85.

Classes commence on 20-12-85.

Contact: **Science Centre**
KARAVEDDY (2273)

## L. P. GAS
### பாவனையாளர்களின் கவனத்திற்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் எல்லா நாட்களிலும் உடனுக்குடன் காஸ் டிலிவரி செய்து கொடுக்கப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகிறோம்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,**
31, மானிப்பாய் வீதி - யாழ்ப்பாணம்.
[2356]

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

# மார்கழிக்குப் பெருமை தரும் திருவெம்பாவை

**காரை. வி. வேலுப்பிள்ளை**

**ஒரு தத்துவ நோக்கு**

ஞான நூலாகவும் உள்ளமுருக்கும் தோத்திர நூலாகவும் விளக்கும் திருவாசகம், திருக்கோவையார் என்பனவற்றைக் கற்போர் தம் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப பலநுட்பமான கருத்துக்களைக் கண்டு ரசிப்பர் என்பது சைவப் பெருமக்களின் நீண்டகால அனுபவ உண்மையாகும்.

தெய்வ சிந்தனைக்கு ஏற்ற புனிதமான பீடு (சிறப்பு) நிரம்பிய மார்கழியில் பலரது சிந்தனைக்கு வரும் திருவெம்பாவை பற்றிய ஒருநோக்கு நம் வாசகர்களுக்குக் கிடைத்துள்ளது.

மணிவாசகப் பெருமான் தாம் அருளிய திருவாசகத்தின் ஒரு பகுதியாகிய சிவ புராணத்தில் ''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவன் புரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்'' என்று சொல்லியமை, பொருளுணர்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியமை காண்க. இது இங்கும் எதற்கும் என்றும் பொருத்த முடையது. மேல்நிலையை பர் பெருமானும் தாம் அருளிய ''நீல பெறுமா றென் னுடியேல்'' என்று தொடங்கும் தேவாரத்தில் ''ஆரூரா என் றென்றே அலறு நில்லே'' என்றுகூறியுள்ளமை காண்க. இவற்றுல் சப்தமிட்டுப் பாடுதலின் முக்கியத்துவம் பிரதிபலிக்கின்றது. மனத்திற்குள் அல்லது மெல்லிய ஓசையில் பாடும்போது பல எண்ணங்கள் மனத்தில் எழுகின்றன. சப்தமிட்டுப் பாடும்போது ஒடுக்கம் வாய்க்கும் எனக் கொள்ளுதலே பொருத்தமானது.

முதல் எட்டுப் பாட்டுக்களும் ஒவ்வொருவராக மொத்தம் எட்டுக் கன்னியர்கள் நித்திரை விட்டு எழுப்பப்பட்டதாகக் கூறுகின்றன. இவர்கள் முறையே மாதே என்றும், நேரிழை என்றும், முத்தன்ன வெண்ணகை என்றும், ஒண்ணித் திலநகை என்றும், படிறீ ஏலக்குழலி என்றும், மானே என்றும், அன்னே என்றும், வாழி என்றும் கூவி அழைக்கப்பட்டார்கள். இவ்விதமான பெயர்கள் உலகோருக்குத் தனிப்பட்ட சிறப்புப் பெயர்களாக உள்ளவையல்ல. வக்கணைப் பெயர்களாகவோ பொதுப் பெயர்களாகவோ கொள்ளப்படத்தக்கவையாகவேயுள்ளன. இப்பெயர்களாற் சுட்டப்படத்தக்கவர்கள் யாராயிருக்கலாம் என்பதைத் திருவெம்பாவையிற் சம்பந்தப்பட்ட பின்வரும் விஷயங்களை ஆராய்வதன் மூலம் கண்டறியலாம்.

**நீர் நிலைகளும் அவற்றின் தன்மைகளும்**

உலகில் குளம், கிணறு, கடல் முதலிய நீர்நிலைகள் உள்ளன. இவைகளில் நீராடுவதால் உடம்பின் மேலுள்ள அழுக்குக் கழுவப்படுகின்றது.

நெஞ்சினிடமாக ஒரு கயம் உண்டென்றும், அதில் வான் சுழி உண்டென்றும், அவ்வான் சுழியில் அகப்பட்டால் வானின் காரியங்களாகிய காம, குரோத, லோப, மோக, மதம் என்பனவற்றின் தாக்கம் ஏற்படும் என்றும் [illegible] காணும் அப்பர் பொருமான் அடைய ஆர்வமுள்ள உயிர்களுக்கு வழிகாட்டியாகவுள்ளவைகளுள் திருவெம்பாவையும் ஒன்ருகும். ஆதலால் அதன் உட்பொருளை அறிந்திருப்பது மிக்க நன்மை பயக்கும்.

**துயில் எழுப்பியவர்களும் கன்னியர்களும்**

''ஆதியும் அந்தமு மில்லா'' என்று தொடங்கும் முதற் பாட்டில், ''சே தியை யாம் பாட'' என்றதனுல் ஒன்றுக்கு மேற்பட்ட தொகையினரே துயிலிலிருந்து எழுப்பினர் என்பதும், இவர்கள் சப்தமிட்டுப் பாடிக்கொண்டு வந்தார்களென்பதும் பெறப்படும். அப் இவைகளின் எழுச்சி குறைவாக உள்ளது. இதனுல் சப்தமிட்டுப் பாடும்போது நியதியின்படி எழவேண்டிய எண்ணங்கள் குறைவாக இருக்கலாம்; அல்லது அவை எழாமல் தடைப்பட்டிருக்கலாம். முன்னதாயின் மேலே கூறப்பட்ட இரு அடியார்களும் உரத்துப்பாடச் சொன்னதற்கு அர்த்தமில்லை. மனம்இரு தன்மையது. ஒன்று விரிதல், மற்றென்று ஒடுங்குதல். விரிந்த அவ்வாறு எண்ணங்கள் பல எழ இடமுண்டு. ஆனுல் ஒடுங்கியமனதில் அவ்வாறு எண்ணங்கள் பல எழ இடமில்லை. ஆகவே சப்தமிட்டுப் பாடுதலால் மன தேவாரம் மறைமுகமாக அறியப்படுத்துகின்றது:-

''நெஞ்சம் என்பதோர்
நீள்கயந் தன்னுள்ளே
வஞ்சம் என்பதோர்
வான்சுழிப் பட்டுநான்
துஞ்சும் போழ்துநின்
நாமத்திருவெழுத்
தஞ்சும் தோன்ற அருளும்
ஐ யாறரே''

இவ்வைந்து காரியங்களும் அசுத்த மாயா காரியங்களான படியால் அவைகளால் பெறப்படுவன துன்பத்துக்கேதுவான தீவினைகளே.

தீவினையை உண்டாக்குவதற்கான கயம் உண்டென்ருல் அதை நீக்குவதற்கான நீர்நிலையும் இருக்கவேண்டும் என்பதே நியதி. இதை

''உள்ளத்தி னுள்ளே உள
பல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து
நின்ருடார் வினைகெட
பள்ளமும் மேடும் பரந்து
திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியி
லோரே''

என்னும் திருமந்திரம் ஊர்ஜிதப்படுத்துகின்றது.

''ஆர்த்த பிறவித்துயர் கெட'' [ஏதுவான வினைகெட] கன்னியர்கள் மொய்யார்தடம் பொய்கைக்குச் சென்று நீராடுகிருர்களென்கின்றது திருவெம்பாவை. இதனுல் இப்பொய்கையும் மேலே கூறப்பட்ட பல தீர்த்தங்களுள் ஒன்ருகும்.

இறைவன் இத்தீர்த்தத்தை உயிர்களின் நிலைகளுக்கேற்ப வழங்குபவன். இதனை

''தோத்திரமா மணலி
லிங்கந் தொடங்கிய
வானிரையிற் பால்
பாத்திரமா வாட்டுதலும்
பரஞ்சோதி பரிந்தருளி
ஆத்தமென மறை நால்வர்க்
கறம்புரி நூலன்றுரைத்த
தீர்த்த மல்கு சடையாரும்
திருவேட்டக்
குடியாரே''

என்று சம்பந்தப்பெருமானும்,

''அத்தாவுன் அடியேனை
அன்பா லார்த்தாய்
அருள்நோக்கில்
தீர்த்தநீர் ஆட்டிக்
கொண்டாய்
எத்தனையும் அரியநீ எளியை
யானுய்
எனையாண்டு கொண்டி
ரங்கியேன்று
கொண்டாய்''
பித்தனேன் பேதையேன்
பேயேன் நாயேன்
பிழைத் தனகள் எத்தனையும்
பொறுத்தாயன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய
ஐயோ
எம்பெருமான் திருக்கருணை
இருந்தவாறே''

என்று அப்பர் பெருமானும், திருவெம்பாவையில் ''தீர்த்தன்'' என்று மாணிக்கவாசகப் பெருமானும் கூறி விளக்கியுள்ளனர். ஆகவே இத் தீர்த்தம் இறைவன் அருள் கிட்டினவர்க்கே கிடைக்கும். எனவே தான் கன்னியர்கள் துயில் விட்டு நீங்கிய நேரம் தொட்டு அருளைப்பெறுவதற்காக இடையருது ''குடைந்து குடைந்து [இதை அப்பர் பெருமான் ''நெக்கு நெக்கு என்று கூறியுள்ளார்] இறைவன் கழல் பாடிக் கொண்டு பொய்கைக்குப் போகிருர்கள் என்கின்றது திருவெம்பாவை.

**கன்னியர்கள்**

வினையைக் கழுவ, கன்னியர்கள் இத்தீர்த்தத்தில் நீராடப் போகிருர்களானபடியால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் வினைப் போகத்திற்கான தூல உடம்பு உண்டு. இவர்கள் ஆடப்போகிற தீர்த்தம் உள்ளத்துள் உண்டு என்று முன் காட்டப் பட்டுள்ளது. தூல உடம்புடன் உள்ளத்துள்ளே புக முடியாது. எனவே கன்னியர்கள் என்பதனுல் உயிர்கள் குறிக்கப்படவில்லை. மேலும், கன்னியர்கள் எண்மரும் தோழியரும் ஒரே உடம்பில் உள்ளவர்களானுல் மட்டுமே ஒருவரையொருவர் எழுப்பிக் கொண்டு உள்ளத்தின் உள்ளே நீராடப் போகலாம். அவ்வாறின்றி ஒவ்வொரு உயிருக்கும் தனித் தனியாக வெவ்வேறு உடம்பு உண்மையால் கன்னியர் எனப் பட்டோர் உயிர்கள் அல்லர்.

சத்திகள் ஒன்பதும் சிவசக்திகளாதலால் அவை சிவனில் வேறல்லாதன. எனவே, சக்திகளும்கன்னியர்களாகக் கணிக்கப்படவில்லை.

என்று உயிர்கள் உளவோ அன்று ஆணவ மலமும் உளது என்கிறது சைவசித்தாந்தம். இம் மலம் உயிர்களை மூடி மறைத்து ஒன்றையும் அறியாமற் செய்வது. இ[illegible] நீக்கப் பட்டாலன்றி உயிர்கள் இறைவனை அடையமாட்டா. அதன் நீக்கத்திற்காக இறைவனை, முதலில் புலன்கள் ஐந்து கரணங்கள் மூன்று மொத்தம் எட்டுத் தத்துவங்களைக் கொண்ட நுண்ணுடம்பைத் தந்தருளியுள்ளார். இத் தத்துவங்களின் செயற்பாடுகள் அசுத்தமானவைகளானபடியால் இவை அசுத்தமாயையிலிருந்து தரப்பட்டவை.

''மயக்கிய ஐம்புலப் பாசம்
அறுத்துக்
துயக்கறுத் தானைத் தொடர்
மின் தொடர்ந்தால்
தியக்கஞ் செய்யாதே சிவனெம்
பெருமான்
உயப்போ என மனம் ஒன்று
வித்தானே.''

என்கின்றது திருமந்திரம்.

சுத்த மாயையிலிருந்து தரப்படாமல் அசுத்தமாயையிலிருந்து மேல் காட்டப்பட்ட தத்துவங்கள் தரப்பட்டபடியால் உயிர்கள் தொன்று தொட்டே மாசுடையவைகள்

(10-ம் பக்கம் பார்க்க)

# ஹேலி வால்நட்சத்திரத்தின் ஒளி மாறுகிறது

ஹேலி வால் நட்சத்திரத்தின் ஒளிக்கதிர் வீச்சின் தீவிரம் மாறுபடுகிறது என்பதை சோவியத் மத்திய ஆசியக் குடியரசான தாஜிகிஸ்தான் வான் — பௌதிக நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர். சில காலத்திற்கு முன்பு அதன் ஒளி விரைவாக அதிகரித்தது சென்ற கோடை காலத்தின்போது அதன் ஒளியானது கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில், பல்லாயிரம் மடங்கு அதிகரித்தது. சென்ற ஆகஸ்ட் முதல் அக்டோபர் வரை இந்தஒளி அதிகரிப்பின் தீவிரம் குறைந்தது. சூரியனை அது நெருங்கும்போது, அதன் வாயு மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களே இதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஹேலி வால் நட்சத்திரத்தின் அமைப்பு, அதில் உள்ள வாயுக்கலவைகள் பற்றிய புதிய தகவல்கள் அதனை அவதானித்து வரும் நிபுணர்களுக்குக் கிடைத்துள்ளன. ஆரம்பத்தில் வெறும் தூசிப்படலமாகத் தென்பட்ட இவ் வால் நட்சத்திரத்தின் வாயுமண்டலத்தில் பல வாயுக்கள் நிறைந்திருப்பதைச் சில மாதங்களுக்கு முன்னர் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கடந்த 40 ஆண்டுகளுக்குமேலாக வால் நட்சத்திரங்கள் பற்றி தாஜிக் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். அவர்களிடம் இரண்டு ஆய்வுக்கூடங்கள் உள்ளன. மத்திய தாஜிகிஸ்தானில் 2,300 மீட்டர் உயரத்தில், ஒரு மீட்டர் குறுக்களவுள்ள கண்ணுடியுடன் கூடிய ஒரு டெலஸ்கோப் இயங்கிக்கொண்டிருக்கிறது.

# வீதிவிதானங்கள்

தனியார் வான்சேவையின் சிறப்பு, பயங்கர விபத்துக்களால் மாசுபடுகிறது.

அதனைக் கட்டுப்படுத்தும் விதானங்கள் சரியாக அமுலபடுவதில்லை; காரணம் கேட்டால் பொலிஸாரே அச்சேவையின் முகாமையாளர்களிற் பலர்என்று சொல்லப்படுகிறது.

இவ்வித சட்டங்கள் உயிருக்கு ஆபத்தில்லாது மீறப்படுவதும்; அவ்வித மீறல்கள் நாகரிகமாக சமாளிக்கப்படுவதும் மேனுட்டு நடைமுறை.

உலகில் நடக்கும் மிசப்பெரும் குற்றங்கள் பிரிட்டனில் நடப்பதில்லையென்று சொல்லமுடியாது.

ஆனுல் பத்திரிகைகள் அவற்றைச் செய்தியாகப் பிரசுரிக்கும்போது தலையங்கம்; ''பொதுமக்கள் பொலிஸாருடன் இந்த மர்மக்கொலை பற்றிய விசாரணையில் ஒத்துழைக்கின்றனர்'' என்று தொடங்கும். பயங்கர விடயம் உள்ளூடனகக் கரந்து நிற்கும்.

வீதிவிதானம் பற்றிய சுவையானகதை இது: பிரபல பிரபு மேஜர் டார்லிங் பெரும் செல்வாக்குடையவர். அண்மையில் அயர்லாந்துக்கு [குடியரசு] தமது 'பொஷ்' மோட்டாரை தானே ஓட்டிச்சென்ருர்

பொலிஸ் மறித்து ''30 மைல் விமிற்கடந்து ஓடுகிறீர்கள்'' என்ருர்.

''எனக்கு அதுபற்றித் தெரிந்திருக்கவில்லை'' என்ருர் பிரபு.

''45 மைல் வேகத்தில் ஓடியிருக்கிறீர், உங்கள் லைசென்சைப் பார்ப்போம்'' என்ருர் பொலிஸ்.

அதனைப்பெற்று நீண்டநேரம் பார்வையிட்டார்

தமக்கொரு உபாயம் மனதில் உதித்ததுஎன்ற பிரபு ''நான் நாட்டின் மறுபுறத்துக்கு பொழுதுபட முன் போகவேண்டும்'' என்றுசொன்னுர்.

''நான் என்ன செய்யமுடியும்? உங்கள் லைசென்சை நுணுக்கமாகப்படிக்கிறேன்'' என்ருர் பொலிஸ்.

''அதுசரி; ஆனுல் இங்கு உடனடியாகக் குற்றமளிக்கும் ஏற்பாடு உண்டா? என்று வினவினுர் பிரபு.

''அப்படி ஒன்றுமில்லை: நல்லமழையும் குளிரும்தான் உண்டு'' என்ருர் பொலிஸ்.

பிரச்னை சுமுகமாக முடிவுற்றது.

★ திருவருகைக்கால 3ம் ஞாயிறு

# நம்மோடு கடவுள்

★ சுவாமி ஜெயசீலன்

கிறிஸ்மஸ் இறைமகன் கிறிஸ்து மனிதனுன சம்பவத்தை நினைவுகூருகிறது. கிறிஸ்து மனிதனுனூர் என்று கூறும் பொழுது இரண்டு துருவங்கள் ஒன்ருக இணைவது தெரிகின்றது. தெய்வீகம், மானுடம் என்ற இரு துருவங்கள் இணைகின்றன.

தெய்வீகத்தை விடத் தாழ்ந்த மனிதத்தன்மையினை கிறிஸ்து பூண்டார். இதனுல் மனிதத்துவம் மாண்புபெற்றது. இதனுல் மேல் நிலையோர் தாழ்நிலையோர், உயர்ந்தது



இழிந்தது என்ற மானுட பேதங்கள் தங்கள் கருத்தை இழக்கின்றன. ஏனெனில் கிறிஸ்து என்ற தெய்வீகத்தின் முன் மிகவும் தாழ்ந்த மனிதத்துவமானது தன்னுள் தானே பிளவுபட்டுக்கொண்டிருக்க முடியாது.

கிறிஸ்து முழு மனிதத்துவத்தையும் தன்பால் ஈர்க்க விழைகின்ருர். அதற்கு அவர் மானுடத்தின் அடிமட்டத்தை தன் உறைவிடமாகத் தேர்ந்து கொண்டார். மனித அடிமட்டத்தில் காணப்படும் இழிந்த பொருள்கள், இழிந்த மனிதர்களைக் கிறிஸ்து தெரிந்ததன் காரணம் இதுதான். கிறிஸ்துவைத் தரிசிக்க விரும்பின் மேல்மட்டத்தில் உள்ளோர் இறங்கி அடிமட்டத்திற்குச் செல்லவேண்டும். மூவரசர்கள் அவ்வாறு இறங்கினுர்கள். கிறிஸ்துவைக்கண்டார்கள். ஏரோது இறங்கமறுத்தான் கிறிஸ்துவைக் காணவில்லை.

எனவே கிறிஸ்து மனிதனுனுர் என்ற உண்மை நெருக்கப்படும் அடக்கப்படும் அடிமட்டத்திலுள்ளோர்க்கு நிதர்சனமானது. கிறிஸ்துவைப்பெறும் எதுவும் புதுவாழ்வடையும். ஏனெனில் கிறிஸ்துவைப் பெறும், அடக்கி ஒடுக்கப்படும் அடிமட்டத்திலுள்ள மக்களும் புதுவாழ்வடைவர். இதுவே கிறிஸ்துவின் மனித ஏற்பு எமக்களிக்கும் செய்தி. இச்செய்தியை நடைமுறையில் அனுமதிக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்று சிந்திக்கும் காலமே ஆகமனகாலமாகும்' தான் பலஸ்தீனுவில் பிறந்தகாலத்திலேயே கிறிஸ்து அகதியாக, இல்லிடம் பெயர்க்கப்பட்டவராக, தொழுவம், மிருகங்கள், கந்தைத்துணி, வைக்கோல், மிருகங்களின் உஷ்ணம், இடையர்களின் தோழமை, அப்பாவிக் குழந்தைகளின் இரத்தம் இவற்றிேடு சம்தந்தப்பட்டவராக இருப்பதைக் காண்கிறேம். இன்றும் நாம் அவரை ஏற்க அங்குதான் செல்ல வேண்டும்,

''சின்னஞ்சிறிய என்சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்'' (மத் 25:46) 1985-ம் ஆண்டு கிறிஸ்மஸை, ஏனைய கிறிஸ்துமஸைகளை போல்கொண்டாட முடியாவிட்டாலும் அதனுள் இவ்வடிமட்டத்தில் பிறந்த கிறிஸ்துவைக் காண நம்முள் எத்தனைபேர் புறப்படுவோம்? எம்முன் தோன்றுகின்ற விடிவெள்ளி எங்களை எங்கு கொண்டு செல்லும்? எங்கள் வீடுகள் ஏரோதின் அரண்மனையாக முடியாதென்பது எமக்குத் தெட்டத்தெளிவு. ஆனுல் அது எங்களை அகதிகள் நிறைந்து வழிகின்ற தொழுவங்கட்கும், இடம் பெயர்க்கப் பட்டோர், வாழும் புதிய சேரிகளுக்கும் அநாதைகளாக்கப்பட்டோர் அங்கவீனராக்கபட்டோர், கைம்பெண்களானேர், சிறைப்பட்டோர் ஆகியோரின் குடும்பங்கள் இவற்றுக்கு இட்டுச்சென்று எங்கள் பொட்டணங்களில் மிஞ்சிக் கிடக்கும் பொன், தூபம், மீறை அவர்கள் முன் அவித்துக்கொட்ட துணிவைத் தருமா என்பதுதான் கேள்விக் குறியாக உள்ளது. எம்முன் இல்லாதவர்கள் இடையர்கள் போன்றுஎம் எளிமையில் மகிழ்வோம். உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும், பூவுலகில் நன்மனதுள்ளோர்க்கு சமாதானமும் இக்கிறிஸ்மஸ் மூலம் வர சற்ருவது முயற்சிப்போம்.

# நூல் கட்டமைப்புக் கலையினை முதன்மைப்படுத்திய முதல் விழா

பல்வேறு விழாக்கள் எடுக்கப்படுகின்றன. தமிழ், இலக்கியம், கல்வி, கலை, கலாசாரம், இசை, சமயம், விஞ்ஞானம் - இப்படி இக்கலைத் துறை தொடர்பாக எடுக்கப்படும் விழாக்களின் பட்டியலை விரிக்கலாம். ஆனுல் நூல்சட்டமைப்புக் கலையினை முதன்மைப்படுத்தி இதுவரை விழா எடுக்கப்பட்டதா எனில் இல்லை என்றே கூறுவோம். எமது வழமைக்கு மாருக மாறிவரும் நெருக்கடியான இக்காலத்திலும் தேவையை நன்கறிந்து புதிய பாரம்பரியம் தோன்றும் வகையில் முத்தான விழா ஒன்று கலை, இலக்கியச் செம்மை மிக்க குரும்பசிட்டி மண்ணிலே மலர்ந்தது. இது நூல் கட்டமைப்புக் கலையினை முதன்மைப்படுத்தி எடுக்கப்பட்ட முதல்விழா! வெற்றி விழா!

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விழா மதி அக்கடமி கல்வி நிலையத்தின் ஆதரவில் மகவம் கலைஞர் வட்டத்தினரால் குரும்பசிட்டி அம்பாள் ஆலயக் கலியாண மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மகவம் கலைஞர் வட்டத்தின் தலைவரான திரு. வேலுப்பிள்ளை அமுதலிங்கம் அவர்களின் தலைமையில் விழா நடைபெற்றது.

தொகுப்பு:
அமுதன்

நூல் கட்டமைப்புக் கலைக்கு எடுக்கப்பட்ட முதல் விழா இதுவேதான் என மகவம் கௌரவிப்பைப் பெற்ற பொன்விழாக்காணும் நூல் கட்டமைப்புக் கலைஞர் திரு. ஆறுமுகம் முத்தையா அவர்களும் அறுதியிட்டு உரைத்தார்.

''நூல் கட்டமைப்புக் கலை நுட்பமும் பொலிவும் மிக்கது கவர்ச்சி தருவது. இக்கலையில் நான் எப்படி ஈடுபட்டேன்; எது ஈடுபட வைத்தது என்ற விபரங்கள் எனக்குத் தெரியாதவை. சுமார் பத்துவயது பராயத்தில் நானுகவே இத்தொழிலில் ஈடுபட்டேன்என்றேகூறவேண்டும்.

''இன்று இங்கு எனக்கு வழங்கப்பட்ட கௌரவத்தை எனது குரு பத்திராதிபர் 'ஈழகேசரி' பொன்னையா அவர்களுக்கே சமர்ப்பிக்கின்றேன்.''

மேற்கண்டவாறு உயர் கௌரவிப்பினைப் பெற்ற பொன் விழாக்காணும் கலைஞர் ஆறுமுகம் முத்தையா அவர்கள் தனது பதிலுரையில் குறிப்பிட்டார்.

கலைஞருக்குப் பொன்னுடை போர்த்தி ஆசீர்வதித்தவர் இலக்கண வித்தகர், பண்டிதர் இ. நமசிவாயதேசிகர் அவர்கள். பூமாலைஅணிவித்துக் கௌரவித்தவர் திரு. வேலுப்பிள்ளை அமுதலிங்கம் அவர்கள். பாமாலை புனைந்தவர் கவிமணி புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள். இப்பாவினுக்கு இசை அமைத்து வாழ்த்திப் பாடியவர் தென்மயிலைப் பாடகர் திரு. சிதம்பரநாதன் அவர்கள். பாராட்டுரை வழங்கியவர் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள். கலைப் பேரரசு பேசுகையில் கலைஞர் முத்தையா சாதாரண கலைஞர் அல்ல; அவரின் கலைத்திறன் சர்வதேச தரத்தை நிகர்த்தது என்ருர்.

விழாவின் ஆரம்பத்தில் உலக மாதா அன்னை அம்பாளின் அருள்வேண்டி ஆராதனை நடைபெற்றது. அண்மையில் தமிழ்க் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றவித்தியா பூஷணம், கலாநிதி நாகராஜா சுப்பிரமணியஐயர் அவர்களுக்குப் பண்டிதர் இ. நமசிவாய தேசிகர் அவர்கள் மாலை சூட்டிக்கௌரவித்தார். 'சக்தி வழிபாடு ஏன் அவசியம்' என்ற மகுடத்தில் சமய ஆய்வரங்கமும் இடம்பெற்றது. ஆய்வாரங்கில் அறிவியல் நோக்கில் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களும் சமூகநோக்கில் திரு. செ. இராஜகுலேந்திரன் அவர்களும், சமயநோக்கில் சைவப்புலவர் அநு. வை. நாகராஜன் அவர்களும் ஆய்வுரை நிகழ்த்தினுர்கள். 'காலமும் கல்வியும்' என்ற மகுடத்தில் கல்விக்கருத்தரங்கமும் நடைபெற்றது. கருத்தரங்கில் திரு. க. வே. மகாதேவன் சட்டத்தரணி அவர்களும் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் கருத்துரை வழங்னர்.

விழாவின் இறுதியில் செல்வி மதினி அமுதன் தயாரித்தளித்து மாணவர்கள் பங்குபற்றிய ஆடல்நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. ''இன்று தொட்டு ஆண்டுதோறும் மதி அக்கடமியின் அநுசரணையுடன் 'மகவம்' கலைஞர்வட்டம் அருங்கலை மேதை ஒருவரைப் பொறுப்புவாய்ந்த அறிஞர் குழுவின்சி பார்சு அடிப்படையில் தெரிவுசெய்து கௌரவிக்

(9-ம் பக்கம் பார்க்க)

## 'நீ ஒரு குரங்கன்' இதன் அர்த்தம் என்ன?

ஒருவர்: மற்றவரைப் பார்த்து 'நீ ஒரு குரங்கன்' என்று 'நக்கல்' அடிக்கிருர்களே இதன் அர்த்தம் என்ன? இதில் ஓர் உயரிய கருத்துப் பொதிந்துள்ளது.

குரங்கம் - மான் [இது வடசொல்] மானை இடக்கையில் ஏந்தியுள்ளவன் குரங்கன். எனவே மானைத்தாங்கியவன் சிவன். எனவே குரங்கன் என்ருல் சிவனைக் குறிக்கும். கு-குற்சிதமான, ரங்கன்-அம்பலத்தை உடையான் என்றும் கூறுவர். திருவேங்கடமுடையானைக் குரங்கனென்று பிள்ளைப் பெருமாளையங்கார் சொன்னதும் உண்டு. இங்கே குரங்கனென்றது குரங்குகளுடன் மலையில் வாழ்தலால் ஆகும்.

ஆதாரம்: 'அஷ்டப்பிரபந்தம்'

முருகவே


## 2-வது வருட நினைவஞ்சலி

திருமதி அக்கினேசகன்னி சந்தியாப்பிள்ளை



தோற்றம்:
17-08-1941

மறைவு:
15-12-1983

ஆறென்ருல் ஆறுவோமோ, ஆறிவிட்டால் தேறுவோமோ, ஆண்டு இரண்டாகிவிட்டாலும்,
நீ நிறைந்த நெஞ்சங்கள் நினை மறந்து நிம்மதி கண்டிடுமோ.

திருமதி அன்ரனி அன்னராணி (சட்டத்தரணி)
15/3, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (2383)



## பாவனையாளர்களின் நலன் கருதி

தேசிய கடதாசிக் கூட்டுத் தாபனத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட
(கிறீம் மோவ் பேப்பர்) கொப்பிகள்

பின் வரும் விலைகளில் விற்பனைக்கு உள்ளது.
முற்பணம் கட்டியவர்களுக்கு இம்மாதம் 23-ந் திகதி முதல் விநியோகம் செய்யப்படும்.
முற்பணத்தை காசாக 18-ந் திகதிக்கு முன்னர் கட்டலாம்.


| | மொத்த விலை | | சில்லறை விலை |
|---|---|---|---|
| A-5-40 Pages | -137/- | per 100 Units | 1/45 |
| -5-80 Pages | -263/- | per 100 Untis | 2/75 |
| A-5-60 Pages | -280/40 | per one Gross | 2/05 |
| 40 Pages (Imperial) | -150/95 | per one Gross | 1/10 |
| 80 Pages (Imperial) | -272/25 | per one Gross | 2/00 |

120, 160, 200, 240 பக்கங்கள்
மொனிற்றேஸ் கொப்பிகளும் உள்ளன.

# அம்பலவாணர் அன் சன்ஸ்

(தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தினுல் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

# கந்தவேள் கோட்டம்



'செங்கை ஆழியான்'

## பிலிப் தே ஒலிவேரு

### பகுதி - 2 அழித்தல்

**1620,** வைகாசி மாதம், 10-ம் திகதி கோடையின் அனல்வெப்டம், யாழ்ப்பாண இராச்சியத்தை வியாபித்திருந்தஒரு நண்பகல்வேளையில், பூநகரியில் பறங்கிகளின் படை காலடி வைத்தது. சோளகக்காற்று முழுப்பலத்துடன் வீசத்தொடங்கியிருக்கவில்லை. காட்டுவெப்பம், தீயாகப் பறங்கிகளின் சிவந்த தோலை எரித்துக் கறுக்கவைத்தது.

போத்துக்கேயப் பறங்கிகள் படைக்குத் தலைமைவகித்து நடத்திவந்த பிலிப்தே ஒலிவேரு களைப்புடன் குதிரையில் அமர்ந்தபடி, கண்முன்விரிந்து கிடக்கும் களப்புக்கடலைப் பார்த்தான். அவன் அருகில் பிறிதொரு புரவியில் அவனது உபதளபதி தெயிக்சேரு கவலையுடன் அமர்ந்திருந்தான். அவர்களின் பின்னுல் அணிவகுத்து வந்திருந்த மூன்று போர்த்துக்கேயப் பட்டாள வீரர்களும், ஐந்தாறு சிங்களவரைக் கொண்ட லாஸ்கெறீன்படை வீரர்களும் தளபதியின் ஆணையை எதிர்பார்க்காமலேயே நாகதேவன் துறையில் காணப்பட்ட பொதுக்கிணற்றினைச் சூழ்ந்து கொண்டார்கள். பலர் காட்டுமரங்களின் நிழல்களில் ஒதுங்கிக்கொண்டார்கள்.

''கப்பித்தான் மேஜர் அவர்களே, எனக்கு எங்களது படையெடுப்புக்களில் நம்பிக்கை குறைந்து வருகின்றது'' என்முன் தெயிக்சேரு. அவன்குரலில் கவலையும் அதேவேளை ஆவேசமும் தொனித்ததை ஒலிவேரு உணர்ந்தான். நீண்டதூரம் கொழும்பிலிருந்து கரையோரமாகப் பலநாட்கள், கடந்துவந்த களைப்பும் தெரிந்தது.

''ஏன்?... '' என்று வினவியபடி குதிரையிலிருந்து குதித்து நிழல் விருட்சமொன்றை நாடிச்சென்முன் ஒலிவேரு. கம்பீரமான உருவம்! உபதளபதி தெயிக்சேருவும் குதிரையிலிருந்து இறங்கி, அவனைத் தொடர்ந்தான்.

''இலங்கையின் பெரும் பகுதியில் போர்த்துக்கேயரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுள்ளது. கண்டி இராச்சியத்திலும் யாழ்ப்பாண இராச்சியத்திலும் மாத்திரம் இவ்வளவு படைவலிமைகொண்ட நம்மால் நமது ஆதிக்கத்தை இன்னமும் ஸ்திரப்படுத்த முடியவில்லை.''

த்தொப்பியைக் கழற்றி எடுதபடி, நிழல்மர அடியில் ஒலிவரு சாய்ந்துகொண்டான்.

'நீ சொல்வது தவறு, தெயிக்சேரு! யாழ்ப்பாண இராச்சியத்தில் நடப்பது நமது ஆட்சிதான்......''

தெயிக்சேருவின் இதழ் சோடியில் புன்னகை விரிந்தது.

''அப்படித்தான் எல்லாரும் கருதுகிமுர்கள். யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்ற மூன்று தடவைகள் படையெடுத்தோம், வென்றோம். நடந்ததென்ன? அங்குள்ள ஒருவனை மன்னனுக்கிவிட்டுத் திறைபெற்று மீண்டோம். மேயர்! பூர்த்தாடு 1591-ம் ஆண்டு, இற்றைக்கு இருபத்தொன்பது வருடங்களுக்கு முன், யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி மன்னனைச் சிரச்சேதம்செய்தார். ஆனுல் அவரும் தவறுசெய்தார். யாரோ இளவரசன் எதிர்மன்னசிங்கனை அரசனுக்கிவிட்டுத் திரும்பி வந்தார்....... நீங்கள் சொல்கிறீர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தில் நமதுகொடி பறக்கிறதுஎன்று இது ஏற்சக்கூடியது தானு? அவ்வாமுயின் இன்று இப்பெரும்படையுடன் மீண்டும் யாழ்ப்பாணத்தின் மீது நாங்களேன் படையெடுத்து வரவேண்டும்?''

''நம்மால் நியமிக்கப்பட்ட மன்னனை நீக்கிவிட்டு, சங்கிலி என்ெருருஅரசகுமாரன் ஆட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். அத்தோடு அவன் நமக்குத் திறை செலுத்தவும் மறுத்து விட்டான். ஆதலால், அவன் தண்டிக்சப்படவேண்டியவன்....''

''நீங்கள் சொல்வது சரியாகில், இம்முறையுடன் இதற்கொரு முடிவுகாணவேண்டும். கப்பித்தான் மேயர் அவர்களே! மீண்டும்மீண்டும் படையெடுத்து நூற்றுக்கணக்கான பறங்கி வீராகளையும் லாஸ்கெறீன் வீரர்களையும் பலிகொடுப்பதை இம்முறையுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். நமது படைவரும்செய்தி கேட்டதும் சிருங்கேரி [சங்சிலி] திறை செலுத்துவதாக ஒப்புக் கொள்வான்....''

''அதைநான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இம்முறை யாழ்ப்பாண இராச்சியத்தின் அரசபரம்பரையை முற்முக அழித்துவிட்டு நானே யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்கப்போகிறேன். இம்முறை போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சி யாழ்ப்பாணத்தில்நிலைநாட்டப்படும். நமது குருவானவர்கள், சபிக்சப்பட்ட யாழ்ப்பாண மக்களை தேவனின் நற்கருணைக்குரியவர்களாக மாற்றுவார்கள்!... அதற்கு முதற்கட்டமாக இம்முறை யாழ்ப்பாணத்திலுள்ள பசாசு வழிபாட்டிடங்கள் அனைத்தையும் தகர்த்தெறியப் போகிறேன்...'' என்முன் பிலிப்தே ஒலிவேரு. அவன் விழிகளில் தொனித்த ஆவேசத்தைக் கண்ட உபதளபதி மௌனமானுன்.

பிலிப் தே ஒலிவேரு கூறியவாறு செய்தான். பூநகரியிலிருந்து, யாழ்ப்பாண கரைக்குத் தோணிகள் மூலம் போர்த்துக்கேயரின்படை சென்றது. தோணிகள் குறைவாக இருந்தன. அதனுல் முழு வீரர்களும் அக்கரையை அடைய எட்டு நாட்கள் பிடித்தன. வண்ணார்பண்ணையில் தமிழர்படைக்கும் பறங்கிகள் படைக்கும் பெரும்யுத்தம் நிகழ்ந்தது. தமிழர்படை தோல்வி கண்டது. மன்னன் சங்கிலி குமாரனும் அவன் குடும்பத்தினரும் சிறைபிடிக்சப்பட்டுக் கோவைக்கு அனுப்பபட்டனர். சிங்கை ஆரிய மன்னனின் இறுதிச் சந்ததிகள், யாழ்ப்பாண இராச்சியத்தின் மண்ணிலிருந்து நாடுகடத்தப்பட்டனர்.

பிலிப்தே ஒலிவேருவின் படைகள் யாழ்ப்பாணத்தில் எதிர்ப்பட்ட சைவ ஆலயங்களைத் தகர்த்துத் தரைமட்டமாக்கத்தொடங்கியது. ஆலய ஆபரணங்களும் பெறுமதிமிக்க பொருள்களும் கொள்ளையிடப்பட்டன. ஆலயங்கள் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்படும் செய்தி விரைவாக நல்லூருக்குப் பரவியது.

சிவசங்கிலி பிரமை பிடித்தவன் போலானுன். அவன் கண்களின்முன் இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன், நிகழ்ந்த யுத்தத்தின் கொடூர நிகழ்வுகள் தோன்றின. குருக்களின் வளவில் சமாதியான யோகியாரும், நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உட்பிரகாரத்தில் மன்னனைக் காப்பாற்ற வாளேந்தி மரணமடைந்த கைலாசநாதக் குருக்களையும் ஒரு கணம் எண்ணிக்கொண்டான். அவன் உடல் தளர்ந்தது.

அந்த நிகழ்வுகளுக்குப்பின் அவன் உடலளவிலும் தளர்ச்சியடைந்திருந்தான். வயோதிபத்தின் சுவடுகள் உடலில் ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தன. கோயில் தொண்டினைத்தவிர வேறொன்றையுமறியாத அந்தச் சுத்தப் பிரமச்சாரியின் மனதில் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலை அழியாது காப்பாற்றவேண்டும் என்ற ஆவேசம் தலைதூக்கியது.

*யாரை யார் காப்பது?*

அவன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு விரைந்து வந்தபோது, கோயிலின்முன் பெருந்திரளான மக்கள் குழுமியிருந்தார்கள். பெரிய ஆலயத்து ஷண்முகநாதக் குருக்களும், சுப்பிரமணியபிள்ளையும் வேறு முக்கிய பிரமுகர்களும் அங்கு நின்றிருந்தார்கள். எல்லார் முகங்களிலும் கவலையின் கோடுகள்; முகங்கள் இருண்டு ஏக்கவசப்பட்டிருந்தன.

''சங்கிலி, உன்னிடம் ஒரு பொறுப்பைத் தரப்போகின்மேம். பெரிய ஆலயத்திற்கு யாது நிகழுமோ தெரியாது. இந்த ஆலயத்து ஆபரணங்களையும் கோயில் விதானங்கள் வரையப்பட்டிருக்கும் செப்பேடுகளையும் நீ பாதுகாப்பாக எடுத்துக்கொண்டு, யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறிவிடவேண்டும். இங்கு வைத்து இவற்றைப் பாதுகாக்கமுடியாது.'' என்முர் சுப்பிரமணியபிள்ளை.

### அத்தியாயம் - 3

''நானு?-'' வியப்புடனும், பயத்துடனும் சிவசங்கிலி கேட்டான்,

''கந்தன்மீது உன்னைவிடப் பக்தி கொண்டவர் யார் இருக்கிமுர்கள்? பந்தபாசங்களுக்கு அப்பாற்பட்டவன் நீ... உன்னை நாம் நம்புகின்மேம். இவற்றை எடுத்துக்கொண்டு மட்டக்களப்பிற்குச் செல். இங்கு நிலைமை சீரானதும் மீண்டும் வா......''

''அப்படியென்முல் இங்குள்ள சிலா விக்கிரகங்கள்...''

''அவற்றையும் எடுத்துப் பூதராயர் குளத்தில் மறைவாகப் புதைக்கப்போகின்மேம்,'' அப்பா...''ஷண்முகநாதக் குருக்களின் விழிகள் நீரைச் சொரிந்தன.

''ஆண்டவன் எங்களைச் சோதிக்கின்முன்...'' என்று தன்னுள் சொல்லிக்கொண்டார் அவர்.

இவ்வளவும் நடந்த மூன்ரும நாள் பிலிப் தே ஒலிவேரு பெரும்படையுடன் பெரிய ஆலய வீதியில், அட்டகாசமாகப் பிரவேசித்தான். வானளாவி உயர்ந்த கோபுரங்களுடன் நிமிர்ந்து நின்றிருந்த ஆலயத்தின் கம்பீரம் அவனை ஒருகணம் வியப்படைய வைத்தது. ''பசாசு வணக்கத்தின் பெரிய ஆலயம் இதுதான்'' என அவன் எண்ணிக்கொண்டான்.

ஆலயத்தின்முன் குழுமிநின்றிருந்த மக்கள் கவலையுடன் காணப்பட்டனர். சுப்பிரமணியபிள்ளை முன்வந்தார்.

''துரை அவர்களே! இந்த ஆலயத்தையாவது அழியாது விடுங்கள்......எங்கள் சொத்துக்கள் அனைத்தையும் வழங்குகின்மேம்......'' என்று இரந்தார்.

ஒலிவேரு அவரை ஏளனமாகப் பார்த்தான்.

''பாவிகளே உங்களை இரட்சிப்பதற்காகவே நாங்கள் வந்திருக்கின்மேம்'' என்று ஒலிவேரு முழக்கமிட்டான். அவர்கள் இரந்து இரந்து கேட்கக் கோயிலை அழித்தற்கான அவனது கொடும் எண்ணம் இன்னமும் அதிகரித்தது.

''இந்த ஆலயத்தைத் தகர்த்தெறியுங்கள்...... கோயில் இருந்த இடம் தெரியாமல் அத்திபாரத்தையும் கிளறித் தூர்த்துவிடுங்கள்......'' என அந்த வன்நெஞ்சன் கட்டளையிட்டான்.

அவனது கட்டளை நிறைவேற்றப்படும்போது, இரவு

(8 ம் பக்கம் பார்க்க)

## பயம் எதற்கு?

படித்திந்தப் பரீட்சைதனை வெல்ல என்று
பகலிரவு கண்விழிப்பு ஏனு வேண்டாம்
இடித்திடித்து ஏற்றிஞலும் மூளைக்கூட்டுள்
இம்பியுமே ஏறுதிலைக் கல்வி நீயும்
குடித்திட்டா சரசுவதி லேகியத்தைக்
குறிக்கோளும் நிறைவுபெறும் என்றதாள்கள்
படித்திட்டேன் சரசுவதி லேகியங்கள்
பற்றிடுவேன் வாணிசற்றும் சறுக்கமாட்டாள்

அடுத்தவீட் டழகுமயில் அம்பிகாமேல்
அசையாத அன்புகொண்டேன் காதல்கூறிக்
கொடுத்த கடிதங்கள் தீக்கொழுந்து கொஞ்சக்
கொடும்பார்வை முனிவுகளை அள்ளிவீசி
எடுத்தெறிந்தாள் என்காதல் ஏற்காநிற்கும்
எழிலதனை வென்றிடமன் மதலேகியங்கள்
கிடக்கையிலே அவள்நினைவால் மெலிவெதற்கு
கிளிமொழியாள் என்காலில் வீள்வாள் உண்மை

தொழிலின்றிப் படிப்பின்றித் தம்பிக்கிப்போ
தொடுப்பொன்று அவசியமோ? என்றிடித்து
இழிவாக எனைவைது முதுகுத்தோலை
இடமாகப் பதம்பார்த்துத் தழும்பு வைத்து
அழியாத வடுபதித்த அப்பு ஓகால்
அன்புடனே எனைநோக்கும் நாளும் கூடும்
துளியெனிலும் அச்சமிலை வாழ்வுஉயரத்
துணைநல்கும் லேகியங்கள் இருக்கப் பயமென்.

—நெடுந்தீவு லக்ஸ்மன்.

சுத்தமான

**விளைவு கற்பூரம்**

சீனுவின் தொழில்நுட்ப வல்லுநர்களின் உதவியுடனும், சீனுவின் தரத்திற்கு அமையவும் முதன் முதலாக இலங்கையில் தயாரிக்கப்பட்டது.

இப்பொழுது தாராளமாக கிடைக்கும்
மொத்த வியாபாரிகளுக்கு விசேஷ கழிவுண்டு-

தொடர்பு கொள்ளவும்,

விநியோகஸ்தர்:

**பிரபா ட்ரேடிங் கம்பெனி,**

31-31A, கபோஸ் லேன், கொழும்பு - 11.
Phone: 29426

# புலியின் நெற்றியில் பொட்டும் குறியும்!



இங்கே காணப்படுவது ஒரு புலியின் உருவம். இதன நெற்றியில் ஒரு பொட்டும் திருநீற்றுக்குறிபோன்று ஒரு அடையாளமும் காணப்படுகின்றன அல்லவா? கொழும்புப் த்திரிகைகளில் தமிழ்ப் புலிகளைக் குறிப்பதற்காகல போடப்படும் படம் அல்ப் இது.

சீன மக்கள் குடியரசைச் சேர்ந்த ஒரு நிறுவனம் வாடிக்கையாளர்களுக்குப் புதுவருடப்பரிசாக அனுப்பிவைக்கும் கைக்குட்டைகளில் இந்தப்படம் பொறிக்கப்பட்டுள்ளது.

காட்டின் அரசனகப் புலியைச் சீனர்கள் கருதுகின்ருர்கள். அதனுல் அரசன் என்ற சீனச் சொல்லே இப் டத்தின் நெற்றியில் பொறிக்கப்பட்டுள்ளது.

சீன மரபின்படி 1986, புலி ஆண்டாகும். சீனுவில் வருடங்களை எலி, நரி, புலி, முயல், யாழி, பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, கோழிக்குஞ்சு, நாய், பன்றி எனப்பெயரிட்டு அழைப்பது வழக்கம்.

புலியாண்டை யொட்டி மக்கள் தினசரியாகப் பாவிக்கும் பொருள்கள் ஆடைகள் நாள்காட்டிகா யாவற்றிலும் புலியின் உரு வம் விரைவில் தோன்ற ஆரம்பிக்கும்.

''யாழிகள் எழுகின்றன, புலிகள் பாய்கின்றன'' என்பதும், ''யாழியைப் போன்ற வீரமும் புலியைப் போன்ற துடிப்பும்'' என்பதும் சீன மக்கள் தம் மத்தியில் வெற்றிகரமாக வாழ்பவர்களைப் போற்றுவதற்குப் பயன் படுத்தும் சொற்ருெடர்களாய் இருக்கும்.

கிராமங்களில் தாய்மார்கள் தம் பிள்ளைகளுக்கான தொப்பிகள், கைலேஞ்சிகள் போன்றவற்றில் இந்த மரபுப் புலியின் உருவத்தைப் பின்னிக் கொடுப்பார்கள்.

'பெ'

# நோர்வேயின் முதலாவது இலங்கை தமிழ் டாக்டர்!

நோர்வே பேர்கன் சர்வகலாசாலையிலிருந்து [University cf Bergen] டாக்டர் சூசை ஜோசப் மருத்துவபட்டம் டெற்று வெளியேறியுள்ளார. நோர்வே பல்கலைக்கழகமொன்றில் மருத்துவப் பட்டம் பெற்று வெளியேறிய முதலாவது இலங்கைத்தமிழர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

வெப்ப வலய மருத்துவம், [Tropical Medicine] தமது மருத்துவக் கல்வி இடம் பெருத போதிலும் நோர்வே மருத்துவக் கல்வி காத்திர மானதும், பலதரப்பட்டது மென்று கூறுகிருர் டாக்டர் சூசை ஜோசப்.

கடந்த ஜனவரியில் வேலூர் தமிழ்நாட்டில் இவர் தமது ஆரம்ப மருத்துவப்டயிற்சியை மேற்கொண்டார். தொடர்ந்து Telemark Central Hospital Skien இல் அப்டயிற்சியை மேற்கொண்டார்.

# இதயத்திலே...

இதயத்திலே,
நுநநுமாகப் பதிந்துவிட்ட
உன் நினைவுச் சுவடுகளை
என்னுல் அழிக்க
முடிவதில்லை.
இதயத்திலே,
அந்தரங்கமாக எழுகின்ற
ஏக்கங்களின் துடிப்புகளையும்
அடக்க முடிவதில்லை.
இதயத்திலே,
உன்னைச் சுற்றிச் சுற்றிவரும்
என் எண்ணங்களுக்கும்
அணை போடமுடிவதில்லை.
விழிகளிலே,
விரவியெங்கும் கலந்துவிட்ட
உன் உருவத்துக்கும்
திரைபோடமுடிவதில்லை.
இதயத்திலே,
இரவுபகல் இரணமாக்கும்
உன் நினைவுகளுக்கும்
தடைபோட முடிவதில்லை.
இதயத்திலே,
சமாதியான எதிர்பார்ப்புக்
களால்
என் மௌனங்களுக்குப்
பொருள் விளக்க
முடிவதில்லை;
இ யத்திலே,
ஊமையான உணர்வுகளால்
உறங்கிவிட்ட இந்த
உறவுக்கு
உத்தரவாதமும் இல்லை.

- துளசி

# கயிறு

எங்கள் நாட்டில் தென்னம் பொச்சு மட்டைகளை மூலப் பொருளாகக் கொண்டு முறுக்குக் கயிறு, தும்பு, பாய், துடைப்பம், கால் மிதி, மெத்தை முதலியன செய்கிருர்கள். ஆண்டுதோறும் ஒரு லட்சம் தொன்னுக்குமதிகமான தும்புப் பொருட்களை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிருேம். தும்புத்தொழில் வடபிரதேசத்திலே நல்ல முறையிலே நடைபெறுவதாகத்தெரியவில்லை. போதுயளவு தென்னைவளமும் கடற்கரைகளும் பிறவசதிகளும் இருந்த போதிலும் தொழில் முனனிலைப் பாடத்துறையினரோ பொருள் வளம்படைத்த முதலாளிகளோ இத்துறையை இலாபகரமானது என இன்னும் கவனிக்கவில்லை.

எம்மவர் பிலிப்பீன்ஸ் தீவுகள், கினியா, தன்சானியா முதலிய தென்னந் தொழிற் சாலையுள்ள நாடுகளுக்குச் சென்று ஆங்காங்கே நலவும் ஆலைத்தொழில் வளத்தைக் கண்டு வந்து இங்கே முதலீடு செய்தால் போதிய வருவாயும் அந்நியச் செலாவணியீட்டமும் உண்டாகும்.

'மில்க்வைற்' செய்தி


# லீடா

முழு ஆடை நிறைந்த பால்

* உடனே கறந்த பசுப்பாலின் ருசி!
* பால் வெண்ணெய் கூடுதலாக உள்ளது!
* இணையற்ற சக்திமிக்க பால்!

• உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட - ஒல்லாந்திலிருந்து ''லீடா'' கிடைக்கிறது.
• பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாத மளிக்கப்படுகின்றது.
• டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன




விற்பனையாளர்
மில்லர்ஸ் லிமிடெட்




## சவூதி

# எப்படி இருக்கிறது? அங்கு என்ன நடக்கிறது?

★ சவூதி அரேபியாவில் பணியாற்றும் இலங்கையர்களில் அதிகமானோர் என்ன தொழில் செய்கிருர்கள் என்பது பற்றி நம்மவர்கள் சிலருக்குத் தெரிந்திருந்தாலும் பலருக்குத் தொரியாத விஷயம் அது. இங்கே பணிபுரியும் நம்மவர்களில் அதிகமானோர் சுத்திகரிப்புத் தொழிலிலேயே ஈடுபடுகிருர்கள் இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம்கள், தபாற் கந்தோர்கள், கடவுச்சீட்டு விநியோக அலுவலகங்கள், ஆஸ்டத்திரிகள் மற்றும் அரசாங்க அலுவலகங்கள் ஆகியவற்றிலும், நகரசுத்திகரிப்பிலும் ஈடுபடுகிருர்கள்.

★ இங்கே நம்மவர்களில் அதிகமானோர் தமது நிரந்தர வேலையைவிட வெளிவேலைகள் செய்தும் பணம் சம்பாதித்துக் கொள்கிருர்கள். வாகனம் கழுவுதல், வீடுகளில் துப்பரவு வேலைசெய்தல், வீட்டுப்பூந்தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுதல் ஆகிய வேலைகள் வெளிவேலைகளில் அடங்கும். வாகனம் ஒன்றைக்கழுவுவதற்கு இலங்கைப் பணப் பெறுமதிக்கு 35 ரூபாவிற்குமேல் 70 ரூபா வரை வாங்குகிருர்கள். மாதாந்த அடிப் படையிலாயின் 350 ரூபா முதல் 420 ரூபா வரை தற்போது வாங்கிக்கொள்கிருர்கள் இவர்கள்.

★ அரேபியர்களின் வீடுகளில் சாரதிகளாகப் டணிபுரிபவர்கள் அங்கே சாரதி வேலையுடன் மாத்திரம் இருந்துவிடுவதில்லை. இவர்கள் தாம் பணிபுரியும் வீட்டின் மலசல கூடங்களையும் சழுவவேண்டிய நிர்ப்பந்தத்தில் கடமையாற்றுகிருர்கள்.

★ இலங்கையில் சேமக்காலையில் காணப்படும் பூச்செடி என வீடுகளில் வளர்ப்பதற்கு விரும்பாத பூச்செடியாக ஒதுக்கித்தள்ளி விடப்பட்டுத் தேடுவாரற்றுக் கிடக்கும் பட்டிப்பூச்செடிக்கு சவூதியில் அழகான பூச்செடிகளுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இங்கே வீடுகள், பூந்தோட்டங்கள், அரசாங்க அலுவலகங்கள், வீதிகளை பட்டிப்பூச்செடிகள் அலங்கரித்து அழகாகக் காட்சி அளிக்கின்றன.

★ அரேபியர் வீடுகளில் பணிபுரியும் பெண்களில் இலங்கைப் பெண்கள் அதிகம்பேர் இருக்கிருர்கள். கூண்டுக்கிளிபோல் காலத்தைக் கழிக்கும் இவர்கள் இலங்கை ஆடவர்களைச் சந்தித்துக் கொள்ளவோ ஆத்ம சுத்தியாக பேசிக் கொள்ளவோ முடியாத கட்டுப்பாட்டுக்குள் அடங்கிக் கிடக்கின்றனர். எனினும் பலர் சாமர்த்தியமாகத் தமது வீட்டுக்காரரையும் ஏமாற்றிவிட்டுச் சந்தித்துக் கொள்கிருர்கள்.

★ இந்தியாவில் இருந்து தமிழ்ச்சஞ்சிகைகள், பத்திரிகைகளும் சிங்கப்பூரில் இருந்து தமிழ் சினிமாவீடியோ கசெற்றுகளும் தாராளமாக வந்துகுவிகின்றன. இது இங்குள்ள தமிழர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும். சஞ்சிகைகள், பத்திரிகைகள் தணிக்கை செய்யப்பட்ட பின்னரே விற்பனைக்கு விடப்படுகின்றன. தணிக்கையின்போது சஞ்சிகைகள், பத்திரிகைகளில் உள்ள கவர்ச்சி கட்டும் படங்களுக்கு மைபூசப்பட்டு அவை மறைக்கப்பட்டு விடுகின்றன. ஆனுல் தமிழ் சினிமா வீடியோ கசெற்றுகளில் அப்படியான தணிக்கை ஒன்றும் செய்யப்படுவதில்லை. கசெற் ஒன்றை ஒரு நாள் வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கைப் பணப் பெறுமதிக்கு 70 ரூபாவரை செலுத்த வேண்டும்.

★ சுத்தமான நீர் (குடிநீர்) கண்ணாடியிலான பிளாஸ்டிக் போத்தல்களில் விற்கப்படுகின்றன. போத்தல் ஒன்று 7 ரூபா 35 சதத்திற்கும், 15 ரூபா 70 சதத்திற்கும் விற்கப்படுகிறது. கசிப்பும் இப்படியான போத்தல்களிலேயே நடமாடுகின்றது. கசிப்பு ஒரு போத்தல் 367 ரூபா 50 சதத்திற்கும், 735 ரூபா விற்கும் விற்பனை செய்யப்படுகிறது. சவூதி அரேபியாவின் சட்டம் கடுமையானதாகவும் சட்டத்தை மீறுபவர்களுக்கு கொடுமையானதாகவும் இருந்த போதிலும் கசிப்பையும் சுத்தமான நீரையும் கொண்டுள்ள போத்தல்களுக்கு நிறத்திற்கும் வித்தியாசம் காணமுடியாததால் கசிப்பு தங்குதடையின்றி உலாவித்திரிகிறது.

★ இங்கு உதைபந்தாட்டத்திலேயே அதிக அக்சறையும், ஆர்வமும் காட்டப்படுகிறது. படிப்பைவிட உதைபந்தாட்டமே அத்தியாவசியமானது என்று கவனம் செலுத்தி அதில் அதிசிரத்தையுடன் ஈடுபடுகிருர்கள். தயிர் டப்பா தயாரிப்பார்கள் அந்த டப்பாக்களில் உதைபந்தாட்டம் சம்பந்தமான டடத்தைப் பிரசுரித்து விளம்பரம் செய்து தயிரை விற்கிருர்கள்.


★ இங்குள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களில் உயரம், மார்பளவு இவற்றில் தகுதியற்றவர்களையும் காணக்கூடியதாக இருக்கிறது. கைவளைந்தவர்கள், கால்வளைந்தவர்கள், கண்பார்வையில் குறைபாடு உடையவர்களையும் பொலிசாரில் காணமுடிகிறது.

(இன்னும் வரும்)

சவூதியிலிருந்து எம். சுபேந்திரன்

## எமது சிறுகதை

# ஒளி பிறந்த வேளை ...



★ இலக்குமி குமாரன்

அந்த புரொட்டஸ்தாந்து தேவாலயத்தின் அடுத்த வளவிலுள்ள ஒரு அழகான வீடு. மார்கழிச் செவ்வந்தி மலர்கள், ''போகன்வில்லா''ச் செடிகளுடன் பசும் புல்தரைகள் அவ்வீட்டின் செழிப்பைக்காட்டிச் சிலிர்த்து நின்றன.

எல்லா கிறிஸ்தவ வீடுகளிலும் போலவே அந்தவீட்டிலும் கிறிஸ்மஸ் மர அலங்காரம். ஆனுல் அங்கு அதன் தரம் சற்று அதிகம். இதற்கு அவ்வீட்டின் செல்லப்பெண் ஜஸிந்தாவே காரணம்.

இத்தனைக்கும் அவள்ஒரு சிறுபெண்ணல்ல. ரூபகுமார் என்ற டாக்டரின் இளம் மனைவி.

கிறிஸ்மஸ் ஆரவாரம் அவளைக் குதூகலத்தின் உச்சத்துக்கே கொண்டுபோய்விடும். ஆனுல்இது அவளுக்குமட்டுந்தான்.

அவளின் கணவனும், தாய்-தந்தையும் இக் குதூகலத்தில் அவளுடன் சேர்ந்து கொண்டாலும் கண்களைக் குளமாக்கியபடியே அவள் செய்பவற்றைக் கவனித்தபடி இருப்பர்.

ஜஸிந்தா போதகர் ஜெயராஜன்தம்பதிகளின் ஏகமகள். போதகராகுமுன்னர் அவர் ஒரு பொறியியலாளர். வளமாகத் தமது குடும்பத்தை வழிபாட்டுடன் இணைத்திருந்தார் அவர்.

சிறுவயதுமுதலே ஜஸிந்தா படுசுட்டி. பாடசாலையில் விளையாட்டு, படிப்பு, நடனம் என்று தனது சகாக்கள் மத்தியில் அவள்ஒரு தாரகை.

மணப்பருவம் - இளம் டாக்டர் ரூபகுமாருக்கு அவளைக் கைப்பிடித்து வைத்தனர் போதகர் ஜெயராஜன் தம்பதிகள்.

அன்று மணப்பெண்ணுக அவள் கொண்டிருந்த எழில்க் கோலத்தைக்கண்டு டாக்டர் ரூபகுமார் எத்துணை அதிர்ஷ்டசாலி என்று திருமணத்துக்கு வந்திருந்தவர்கள் பேசியதை இன்றும் அந்தப் போதகர்தம்பதிகள் கண்கலங்கநினைப்பதுண்டு.

ஜஸிந்தா-ரூபகுமாரின் முதலாவது கிறிஸ்மஸ் அது. தடல்புடலாகக் கொண்டாட வேண்டுமென்று அந்த இளசுகள் கற்பனை.

புதுத்தம்பதியின் புதுப்பொலிவு அவர்களின் வீட்டையும் வளவையும் ஒரு நந்தவனமாகவே மாற்றிவிட்டிருந்தது.

ரூபகுமாருக்கு அன்றொரு சோதனைமிக்க சத்திரசிகிச்சை. நீண்டநேரப் போராட்டத்தின் பின்னர் அவன் அதனை வெற்றிகரமாக முடித்திருந்தார்.

சக டாக்டர்களின் பாராட்டு அந்த நோயாளியின் உறவினர்கள் அனைப்புகழ்ந்து-வணங்கி தெரிவித்த நன்றிகளைத் தாங்கியபடி மாலை வீடு திரும்பிக்கொண்டிருந்தான்.

ஜஸிந்தாவை அன்று கிறிஸ்மஸ் 'ஷொப்பிங்' கூட்டிப்போவதாகக் காலையிலே கூறியிருந்தான்.

மனதில் ஆப்பரேசன் தந்த வெற்றி; களைப்படைந்திருந்த உடலை பூமாரியாகக் கொட்டிய அந்தக்குழாயின்கீழ் நின்றபடியே உடலின் அசதியை குளியலறையில் ரூபகுமார் போக்கிக் கொண்டிருந்தான்.

திருமணத்தின்பின் அவன் வாங்கிய புத்தம்புது 'பேஜோ' கார். அன்று அவனதும் ஜஸிந்தாவினதும் குதூகலம் அதனிலும் ஊடுருவியிருந்தது. இளம்மாலை வெய்யிலில் அந்தப் பால்வெண்ணிற பேஜோ மினுங்கிக்கொண்டிருந்தது.

வீட்டுவளவிலிருந்து வீதியில் ஏறித் திரும்பியபோது அந்தக் கார் எதிரே ஜெயராஜன் தமது மனைவியுடன் தேவாலயத்திலிருந்து வந்துகொண்டிருந்தார்.

''இன்று கிறிஸ்மஸ் ஷொப்பிங் சாப்பாட்டை வெளியே வைத்துக்கொள்வோம்'' என்று கார் ஜன்னல்வழியே கைகாட்டியபடி கூறிச்சென்ருள் ஜஸிந்தா.

அப் புதுத்தம்பதியை அந்த வெண்ணிற வாகனம் சுமந்து சென்ற அழகைப்பார்த்து ஜெயராஜனும் அவர் மனைவியும் வைத்தகண் வாங்காது பார்த்து நின்றனர்.

கிறிஸ்மஸ் சந்தடி; ஆமை வேகத்தில் அந்தக்கார் கடைத்தெருவில் சென்றது. பல கார்கள் நீண்டவரிசையில் நின்றிருந்தன. அவற்றில் ஒன்ருக அந்த பேஜோவும் சேர்ந்து கொண்டது.

ஜஸிந்தாவும், ரூபகுமாரும் 'ஷொப்பிங்' தொடங்கினர். கிறிஸ்மஸ் கேக்ஒன்றைப் பெரிதாகச் செய்யவேண்டும்; அத்துடன் விதவிதமான சாப்பாடுகளைத் தயாரிக்கவேண்டுமென்பதே ஜஸிந்தாவின் விருப்பம்.

கிறிஸ்மஸ்மர அலங்காரம், வீட்டு அலங்காரத்துக்கான சாமான்களையும் அவர்கள் பல்வேறு ரகங்களிலும் வேண்டினர்.

இரவுமணி எட்டரையைத் தாண்டியிருந்தது. சாமான்களைக் காரில்போட்டு அதனை 'ஸ்டார்ட்' செய்தான் ரூபகுமார். தெருவில் சனக்கூட்டம் மெதுவாகவே நகர்ந்துகொண்டிருந்தது. மார்கழி மாதக் குளிர் இரவு.

காரைத் திருப்புவதற்காக பின்னுல் பார்வையைச்செலுத்திஞர் ரூபகுமார்.

''டுமீர்ர்ர் என்ற பயங்கரக் குண்டுச்சத்தம் அத் தெருவையே உலுப்பியது.''

''ஐயோ, தாக்குகிருர்கள்'' என்று குளறியடித்தபடி சனம் சிதறிஓடத் தொடங்கியது.

குண்டு வெடித்த திசையில் இராணுவக் கவசவாகன மொறினிலிருந்து உடலொன்று தீப்பிழம்பாக வெளியே வந்து விழுந்தது.

தொடர்ந்து வெடிச்சத்தங்கள். சனங்கள் விழுவதும் ஓடுவதுமாக அந்த கடைத்தருதனதுபொலிவை விரைந்து இழந்துகொண்டிருந்தது.

ரூபகுமாரின் கார்பின் கதவும் திடீரெனத் திறக்கப்பட்டது. ஒரு துப்பாக்கி மனிதன் வாயாலும், மூக்காலும் இரத்தம் பீறிட்டுப்பாய அந்தக் காரின் பின்ஸீட்டில் மல்லாந்து விழுந்ததுதான் தாமதம் ''ஓ'' வென்று அந்தக் காரே அதிரும்படி ஜஸிந்தா அலறியடித்து ரூபகுமார் மீது சாய்ந்தாள்.

சற்றுநேரத்தில் நிலைமை மாறியது. சாரை சாரையாக சிப்பாய்கள் அந்தத்தெருவை நிறைத்தனர்.

பல கார்கள் வெடித்துச் சிதறியிருந்தன. ஆங்காங்கே பல உடல்கள் பலகோணங்களில் கிடந்தன. சிலவற்றில் மட்டுமே முனகல் சத்தங்கள். ஏனையவை கல்லாகியிருந்தன.

இச்சம்பவம் நடந்து ஆறு ஆண்டுகள் சென்றிருந்தன. ஜஸிந்தாவிடம் குடிகொண்டிருந்த குதூகலம்- இளமைத் துடிப்பு அனைத்தையும் அந்தப் பயங்கரம் பறித்தே விட்டிருந்தது.

தன்னுலியன்ற சிகிச்சைகள் எல்லாவற்றிற்கும் ஜஸிந்தாவை உட்படுத்திஞன் ரூபகுமார். முரட்டுத் தனமான சிகிச்சைகளை வழங்கி தன் இளம்மனைவியின் கோலத்தைக் கெடுக்க அதன் விரும்பவில்லை.

தற்போது அவள் ஒரு 'அம்னிசியா' நோயாளி. அந்தப் பயங்கரம் அவள் மனதை விர்ரென்று ஊடறுத்து -திணறடித்து ஒரு எட்டு வயதுச் சிறுமியின் வளர்ச்சிப் பருவத்திற்கு அவளைப் பின்னேக்கி அது தள்ளியது.

இத்தடவை 'கிறிஸ்மஸ்' பண்டிகையின் போதும் ஜஸிந்தாவின் சிறுபிள்ளைத் தனமான குதூகலத்திற்குக் குறைவிருக்கவில்லை.

இந்த மரம், இப்படி மரம் என்று தனக்குப் பிடித்தமான கிறிஸ்மஸ் மரங்களையெல்லாம் அவள் கேட்டுக் கொண்டிருப்பாள். ரூபகுமாரோ போதகர் ஜெயராஜன் தம்பதியோ சற்றும் மனஞ் சலிக்காமல் அவள் விருப்டப்படியே கேட்டவற்றையெல்லாம் ஒரு சிறு பிள்ளைக்குப் போல் வேண்டிக் கொடுத்தனர்.

அன்று 'கிறிஸ்மஸ்' தினத்திற்கு முன்னைய இரவு; ஜஸிந்தாவின் விருப்பப்படியே அழகிய பெரும் 'சைப்பிறஸ்' மரமொன்றை அலங்காரத்துக்காக நுவரேலியாவிலிருந்து ரூபகுமார் வரவழைத்திருந்தான். அதற்கு ஜஸிந்தாவுடன் சேர்ந்தே காலை முதல் அலங்காரங்களைச் செய்திருந்தான் அவன்.

சிறு பிள்ளையாகவே மாறிவிட்டிருந்த ஜஸிந்தா அந்த மரத்துக்கு அலங்காரத்துக்கு மேல் அலங்காரம் செய்தாள். களைத்துவிட்டால் அம் மரத்தின் கீழேயே சாய்ந்து விடுவாள்.

நள்ளிரவு ஆராதனைக்சாக வண.ஜெயராஜன் தம்பதிகள் புறப்பட்டனர். மகளையும், ரூபகுமாரையும் முத்தமிட்டு கண்கலங்கிய படியே தேவாலயம் சென்றனர் அவர்கள்.

மணி பன்னிரண்டு தேவாலயத்தில் தேவமைந்தனின் பிறப்பைக் குறிக்கும் மணியோசை ஒலித்தது. ரூபகுமார் தனது அறையிலிருந்தபடியே பிரார்த்தித்துக் கொண்டிருந்தான்.

திடீரென அந்த வீடே இருண்டிடும் படியாக வீறிட்டுக் குளறும் சத்தம் கேட்டது. ரூபகுமார் பதறியடித்தபடி ஹாலுக்குள் வந்தான். அங்கே ஜஸிந்தா கிறிஸ்மஸ் மரத்தைத் தழுவியபடி துடித்துக் கொண்டிருந்தாள்.

அருகே சென்ற ரூபகுமாருக்கு விஷயம் புரிந்தது. பாய்ந்து சென்று வீட்டின் 'மெயின்' சுவிட்சை அணைத்துவிட்டான். ஜஸிந்தாவை அவள் பற்றிப் பிடித்திருந்த அந்த மரக்கொப்பிலிருந்து அகற்றினுன்.

அலறல் சத்தங் கேட்டு தேவாலயத்திலிருந்தவர்கள் ஓடி வந்தனர்.

ஜஸிந்தாவுக்கு விபரீதம் எதுவுமில்லை என்று ரூபகுமாருக்குப் புரிந்தது. மெழுகுவர்த்திகள் ஏற்றப்பட்டன; இருளகன்றது. கட்டிலில் ஜஸிந்தா மயக்கம் தெளியாது கிடந்தாள்.

[8ம் பக்கம் பார்க்க]

## நேசம் வைத்த இந்த மண்

என்னைச் சுமந்தபோ தேற்பட்ட தவனத்தில்-அன்னை
எடுத்துண் டனளாடிம இந்தமண்ணே!
கொன்னைக் குதலையைப் பேசியே திரிகையில்-நான்
கோலி யுண்டதும் இந்தமண்ணே!

பொல்லாப் பயலென்றன் னைகோலால் ஒறுக்கையில்-துள்ளிப்
புரண்டே யழுததும் இந்தமண்ணே!
இல்லிற் பிறையென எழிலாக வளர்கையில்-கால்
எடுத்து முதலடி இட்டமண்ணே!

இன்பத் தமிழினைக் கற்கையில் அகரத்தைக்-கையால்
எழுதி யறிந்ததும் இந்தமண்ணே!
துன்பப் படவெனைப் பிறர்வைத வேளையில்-அள்ளித்
தூற்றி விட்டதும் இந்தமண்ணே!

பொன்னி னுடலது புழுதிபட வளைந்துநான்-அன்று
பொழுதெல் லாமடி யிருந்தமண்ணே!
சண்ணிற் காத்தரும் டயிரிட்டே யுழைத்திட-இன்றும்
கஞ்சி தருவதும் இந்தமண்ணே!

நேசம் வைத்துமே வளர்த்திட்ட இந்தமண்ணில்-பிறர்
நின்று வன்செயல் காட்டிடவோ?
மாசு பட்டிடக் கைகட்டி வாய்பொத்தி-நான்
மண்டி யிட்டுமே கேட்டிடவோ?

கரிய சிறையெனைக் கால்கட்டிப் போட்டாலும்-தம்பி
கண்ணி னுயிரின்மே லானமண்ணை
உரிய முறையினிற் காத்திடச் சூளுரைத்தேன்-என்றன்
உயிரு மீகுவன் உண்டுறங்கேன்!

—தென்புலோலிப்
பண்டிதர் வீ. பரந்தாமன்.

SPOKEN ENGLISH

English is caught rather than taught and the best way of learning English is to speak it.

மூன்றே மாதங்களில் ஆங்கிலத்திற் சரளமாகப் பேசக் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கு அரிய சந்தர்ப்பம்.

Commencement: 16-12-85- காலை 9-00 மணி.

Fees: Rs. 100/- (முழுப்பயிற்சிக்கும்)

பிரபல ஆங்கில விரிவுரையாளர்:

ஆசிரியர்: கந்தையா நவரேந்திரன்

CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.
PHONE: 24201

# இறுதி மூச்சுவரை யாழ். இந்து அவர் நெஞ்சில் நிறைந்திருந்தது!


அந்தச் சிறுவனுக்கு அப்பொழுது வயது பதினன்கு, மீசை அரும்பாத உலகம். இன்னது என்று அறியாத பிள்ளைப் பராயத்தின் எல்லையில் நின்றுகொண்டிருந்தான். அக்காலத்தில் ஈ. எஸ். எல். ஸி. என அழைக்கப்பட்ட வகுப்பிற் சித்தியடைந்து ''இனி என்ன செய்வது?'' என்ற கேள்வி இதயத்தில் விழப் பெருந்தடுமாற்றத்திலே சிக்கித் தவித்தநிலையில் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் தொடர்ந்து படிக்குமாறு அவனை வற்புறுத்தினர். கணிதத்திலும், மொழிகளிலும் அசாதாரண திறமையடைந்த அம் மாணவன், தன் கல்லூரித் தாயை உயிர் போல நேசிப்பவன்; அடக்கமும் நற்டண்புகளும் வாய்த்த அருமையான பிள்ளை. அவனை இழப்பதை எந்த ஆசிரியர்தாம் விரும்புவர்?

ஆனல் ஒருவயதில் தாயை இழந்து அண்மையில்தான் தந்தையையும் பறிகொடுத்து ஏழ்மையில் உழன்ற அவனுக்குப் பிறரின் தயவில் வாழக் கடுகளவும் விருப்டம் இல்லை. எனவே படிப்பிற்கு முழுக்குப் போடுவது என்று முடிவாகத் தீர்மானித்துப் பரந்தஉலகில் அவன் காலடிஎடுத்து வைத்தான். பதினறு வயதிலே புகையிரத சேவையிற் சேர்ந்து கொண்டான்.

## சொக்கன்

இவ்வாறு அன்று சேர்ந்து, சொந்தக்கால்களில் நின்று படிப்படியாக உயர்ந்த சிறுவனே, அண்மையில் அமரரான வே. தில்லையம்பலம் அவர்கள். கடமையிலே கண்ணியமும் கட்டுப்பாடும் கொண்டு தமக்கென அமைந்த பெருங்குடும்பத்தின் பொறுப்பினைப் பாசத்தோடும் பண்போடும் சுமந்துகொண்டு இரண்டிலும் முழுமையான நிறைவும் வெற்றியும் கண்டதால், இப்பெரியார் தமது நிறைந்த வாழ்விலே ஆனந்தமும் அமைதியும் கண்டிருப்பார் என்பதில் ஐயம்இல்லை.

இங்ஙனம் லௌகிகவாழ்வில் முழுமைகண்டதோடு அவர் ஆன்மீக வாழ்விலும் தலைப்பட்டு நின்ருர்: சாயி பாபா பத்தராயும் இறுதிக் காலத்தில் சைவ பரிபாலன சபை உறுப்பினராயும் விளங்கியஇவர். தனிநாயகஅடிகளாரின் ''Tamil Culture'' ஆய்வுச் சஞ்சிகையின் அபிமான வாசகராயிருந்தார். இந்து சாதனம் பத்திரிகையில் பல்துறை கட்டுரைகள் எழுதியும் வந்தார். அண்மையில் நூல்களையும், சைவசித்தாந்த நூல்களையும் விரும்பிப்படித்து வந்ததோடு தேவாரம், திருவாசகம் ஆகியவற்றையும் பாராயணம் செய்துவந்தார். ஆயுர்வேத வைத்திய நூல்களைக் கற்பதிலும் ஆர்வம்மிக்கவர். சமஸ்கிருதம், மலையாளம் கன்னடம், தெலுங்கு, சிங்களம் ஆகிய மொழிகளிலும் இவருக்குப் போதிய அறிவு இருந்தது. ஓய்வுக்காலத்தில் தம் பேரப்பிள்ளைகளுக்கு ஆங்கிலமும் கணிதமும் கற்பித்து வந்தார். குமரகுருபர சுவாமிகளின் பிரபந்தங்களிலே மிகுந்த ஆர்வமும் திறனும் அவருக்கு இருந்தது.



இவ்வாறு பலதுறைகளிலும் ஈடுபாடு கொண்டு வாழ்ந்த அமரர் தில்லையம்பலம் தமது வாழ்நாள் இறுதிவரை, தாம் கல்விகற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலே பாசமும் பக்தியும் பூண்டு வாழ்ந்தது குறிப்பிடத்தக்கது. தம்முடைய மகன் அக்கல்லூரியை விட்டு வேறு கல்லூரியிலே சேர முற்பட்டதை அவர் வன்மையாக எதிர்த்து, அவரைத் தொடர்ந்து அங்கேயே கற்க வைத்தார. இன்று அந்த மகன் டாக்டராய் உள்ளார். தம்பேரன் ஒருவரும் இவ்வாறு முடிவுசெய்ததை அவர்விரும்பவில்லை. தமது வழி வருவோர் யாவரும் 'யாழ். இந்துவிலேயே கல்விபெறல் வேண்டும்' என்ற அவரின் வேணவாவினை இந்தச்செயல்கள் வெளிப்படுத்துகின்றன. ஆங்கிலக்கல்வி கிறிஸ்தவ மிஷனரிகளின் ஏகபோக உரிமையாய் விளங்கிய காலத்தில், சைவத் தமிழ் இளைஞர்களின் கல்வி வாய்ப்பிற்கு உறுதுணைபுரியத் தோன்றிய 'யாழ். இந்து'வை அவர் தமது உயிர்போல நேசித்ததில் வியப்பு இல்லை.

24-11-1985, 01-12-1985 ஆகிய தேதிகளிலே அமரர் தில்லையம்பலம், தம் கல்விக் கண்ணைத் திறந்து வைத்த அன்னையாகிய யாழ். இந்து பற்றித் தொடர்கட்டுரை ஒன்றினை 'ஈழநாடு' வாரமலரில் எழுதியிருந்தார். ஒருவர் வாழ்நாள் முழுவதும் எதைப் எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருக்கிருரோ அதுவே இறுதிக்காலத்திலும் அவர் முன்புவந்துநிற்கும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக அவரின்கட்டுரை விளங்கியது. கல்லூரி பற்றியும் தம்கால ஆசிரியர் பெரியோர்கள் பற்றியும் பசுமைநிறைந்த அவரின் நினைவுகளை இக்கட்டுரையில் நாம் கண்டோம். இருபதாம் நூற்றுண்டின் தொடக்க காலத்தில் 'யாழ். இந்து' இருந்தநிலையை இக்கட்டுரை படம்பிடித்துக் காட்டுகிறது.

தமது இலட்சிய புருஷர்களாய் இதயத்தில் இருத்திப் போற்றிய கலாநிதி பொன்னையா, சங்கரப்பிள்ளை போன்ற ஆசிரியர் திலகங்களாக இன்றையஇளைஞர் பரம்பரை விளங்கல் வேண்டும் என்ற வேணவாவைக் கொண்டிருந்த அமரர் தில்லையம்பலத்தின் மறைவு அவர் குடும்பத்தினருக்கு மட்டுமன்றி நூற்றுண்டு நிறைவினை எதிர்நோக்கியிருக்கும் 'யாழ். இந்துவிற்கும் பேரிழப்பு.

## சிறுகதை

[7ம் பக்கத் தொடர்ச்சி]

வண. ஜெயராஜனும் அவர் மனைவியும் ரூபகுமாருடன் அவளருகே இருந்தனர். அதிகாலை 4 மணி. ஜஸிந்தா கண் விழித்தாள். ''நான் எங்கே இருக்கிறேன்... என்ன நடந்தது?'' என்ற வார்த்தைகள் அவள் வாயிலிருந்து உதிர்ந்தன.

''நீ எங்குமில்லை எம்முடன் தானிருக்கிருய்'' என்ருர் ஜெயராஜன். கடந்த 5 வருடங்களாக அவள் முகத்தில் காணப்படாத தெளிவை அன்று ரூபகுமார் அவளிடம் கண்டான்.

தனது நண்பனுன மனநோய் சிகிச்சை நிபுணரான பாஸ்கரனை உடனே வீடு வரும்படி அவன் போன் செய்தான்.

காலை ஐந்து மணி; டாக்டர் பாஸ்கரன் வீடு வந்தார். அந்த கிறிஸ்மஸ் மரத்தின் மின் அலங்காரங்கள் அகற்றப்பட்டு மெயின் சுவிட்ச் போடப்பட்டது. வீட்டில் மீண்டும் வெளிச்சம்.

டாக்டர் பாஸ்கரன் சிறிது நேரத்தில் ஜஸிந்தாவின் அறையிலிருந்து வெளியே வந்தார். அவரது முகத்தில் மகிழ்ச்சி ஆரைகள்; ரூபகுமாரை கட்டித் தழுவி''ஹப்பி கிறிஸ்மஸ்'' என்ருர் அவர்.

ஜஸிந்தா மீண்டும் பழைய வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிருள் இப்போ அவள் நோயாளி இல்லை'' மின்சாரம் கொண்டு வந்த அதிர்ச்சி அவளை ஆக்கிரமித்திருந்த அதிர்ச்சியை வென்றுவிட்டது என்ருர் அவர்.

ரூபகுமார் மெதுவாக தலை நிமிர்ந்தான். வீட்டு ஜன்னல் ஊடாக எதிரே தெரிந்த தேவாலய முகப்பை நோக்கினன். காலைக்கதிரவன் ஒளி கதிர்கள் அத்தேவாலயத்தின் கூரையின் மேலிருந்த சிலுவையில் பட்டுத் தெறித்துக் கொண்டிருந்தன.

அச் சிலுவையின் அடியில் எங்கிருந்தோ பறந்து வந்த இரு மணிப்புருக்கள் ஒன்றையொன்று சிறகுகளால் வருடியபடி அதன்கீழே இருந்து முணுமுணுத்தபடிஇருந்தன.

## கந்தவேள்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

படரத் தொடங்கியது. அதே வேளை விழிகளில் நீர்வடிய முல்லைத்தீவைக் கடந்து, கரையோர மார்க்கமாக மட்டக்களப்பை நோக்கி ஒரு பரதேசியாகச் சிவசங்கிலி நடந்து கொண்டிருந்தான்.

[இரண்டாம் பகுதி முற்றும்]

## நுளம்பு

நண்பர்: என்ன, உனது உடம்பெல்லாம் தடித்து இருக்கிறதே?

மற்றவர்: நுளம்பு கடித்துத் தடித்துவிட்டது. அது சரி,உனது உடம்பேன் தடித்து விட்டது?

நண்பர்: நுளம்பு அடித்துத் தடித்துவிட்டது.

★

மகன்: நீங்கள் நல்லாய்க் கும்மி அடிக்கிறீர்களே, அப்பா!

அப்பா: இல்லை இல்லை நான் நுளம்பு அடிக்கிறேனடா.

★

பையன்: நான் உன்னை நுளம்பைப்போல அடித்து விடுவேனடா?

மறுபையன்: நான் நுளம்பைப் போல உன்னைக் கடித்து விடுவேனடா?

★

தகப்பன்: எங்கள் மகன் கல்வியில் முன்னேற வருடம் முழுவதும் இந்த வீட்டில் நுளம்புகள் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்!

தாய்: ஏன் அப்படி விரும்புகிறீர்கள்?

தகப்பன்: எங்கள் மகன் இரவில் பிந்திப் படுக்கிறதையும் அதிகாலையில் முந்தி எழுந்து படிக்கிறதையும் கவனிக்கவில்லையா?

★

தாய் நுளம்பு: எனது மகனைப் பார்க்கக் கவலையாக இருக்கிறது.

தந்தை நுளம்பு: ஏன்? ஏன்??

தாய் நுளம்பு: போராட்டம் அது இது என்று பேசுகிருன், கவனிக்கவில்லையா?

தந்தை நுளம்பு: அவன் யாராவது தொழிற்சங்கவாதியின் இரத்தத்தைக் குடித்திருப்பான். அதனுல் தான் அப்படி!

★

குஞ்சு நுளம்பு: நான் நுளம்பு இனத்தில் பிறந்ததையிட்டுப் பெருமைப் படுகின்றேன், அம்மா?

தாய் நுளம்பு: அப்படி என்ன இருக்கிறது!

குஞ்சு நுளம்பு: எத்தனையோ நாடுகள் எத்தனையோ கோடி ரூபாய்களைச் செலவுசெய்து எத்தனையோ வழிமுறைகளைப் பின்பற்றி எங்கள்இனத்தை அழிக்கமுயன்றும் முடியாது திகைக்கின்றனவே?

★

ஆசிரியர்: ''நுளம்பு கடிக்கிறது'' என்ன காலம் குமார்? சொல்லு?

குமார்: மழை காலம் ஐயா.

★

அன்பு: நுளம்பின் நீதி சமநீதி.

தம்பு: எப்படி?

அன்பு:பால்,வயது,இனம், மொழி, சாதி, உள்ளவன், இல்லாதவன், படித்தவன், படிக்காதவன் என்று எதுவும் வேறுபாடு பார்த்துக் கடிப்பதில்லையே நுளம்புகள்.

★

ஒருவர்: நுளம்புக் காலத்தில் திருடர்தொல்லை இல்லையப்பா.

மற்றவர்: விசேட ஏற்பாடு எதுவும் உண்டா?

ஒருவர்: நுளம்புத் தொல்லையால் வீடுகளில் யாருக்கும் தூக்கம் வருகிறதில்லையல்லவா.

★

தாய் நுளம்பு: என்னடா வெறியிலை வருகிருய்? மதுப் பழக்கமுமுண்டோ?

மகன் நுளம்பு: வரும் வழியில் வீதியோரத்தில் கிடந்த ஒருவனின் இரத்தத்தைச் சுவைத்துவிட்டேன்; அதன்பின்தான் தவறு புரிந்தது, அம்மா!

## ஜோக்ஸ்

★

தலைவன் நுளம்பு: ஊருக்குள் போய் வந்தாயே, மனிதர்கள் என்ன பேசிக்கொள்கிருர்கள்?

ஒற்றன் நுளம்பு: இரவு நேரங்களில் எங்கள் தாக்குதல்களின் உக்கிரம் பற்றிய எல்லாரும் பேசிக் கொள்கிருர்கள்.

★

பாலு: உண்மையில் நுளம்புகள் வீரம் செறிந்தவையே.

கோபு: எப்படியப்பா?

பாலு: தூங்கும் மனிதரை சத்தமிட்டு விழிக்கச் செய்து விட்டல்லவா கடிக்கின்றன!

''குன்றுதோருடி''

## சுதந்திரம்

சுதந்திரமே, வரையறையற்ற ஒருமையுடன் திகழும் பரமாத்மாவின் தருமமாகும். அகில இயற்கையின் மீது இரகசியமாக ஆட்சி செலுத்துவதும் அதுவே

ஸ்ரீ அரவிந்தர்

★

ஆண் தனக்குத்தெரிந்ததைத் தான் சொல்லுவான் ஆனல் பெண்ணே தனக்கு மகிழ்ச்சிதரக் கூடிய விஷயங்களைத்தான் சொல்லுவாள். -ரூஸோ

யாழ் மக்களுக்கு
ஓர் நற்செய்தி
வெளிநாட்டுப் பயணத்திற்கான விமான டிக்கட்டுகள், பாஸ்போட், விசா, பிரயாணிகள் காசோலைகள் மற்றும் பிரயாணங்களுக்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்துதரப்படும்.
தொடர்பு கொள்ளுங்கள்:
விஜயமாலா ரவல்ஸ்,
213, 215, செட்டியார்தெரு, கொழும்பு 11.
தொலைபேசி: 547205
நேரில் தொடர்பு கொள்ள முடியாதவர்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:
திருமதி சி. கஜமுகலிங்கம்,
ரஜனி நிலையம், ஊரியாட்டி, சுன்னுகம்.
(9315)



# இவ்வாரம் எப்படி?

மாதம் — கார்த்திகை 30[1985-12-15]ஞாயிறு
திதி - சதுர்த்தி பின் இரவுவரை
நக்ஷத்திரம்— உத்தராடம் முற்பகல் வரை

### மேடம்

மதிவழி நடப்பின் மற்றவர்கள் பெருமைப்படுமளவிற்கு முன்னேற்றமுண்டு. பயன் தரும் காரியம் ஒன்று மேற்கொள்ளப்படலாம். அறிஞர் ஒருவரின் சந்திப்பும் உண்டு.

### இடபம்

புதிய பாதையொன்று உங்களை எதிர்நோக்கியுள்ளது. புத்திரர்களால் மனத்திற்குத் திருப்தி ஏற்படும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு சுமுகமாய் இருக்கும். செல்வாக்கும் பெருகும்.

### மிதுனம்

பெருமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரத்தில் மாட்டிக்கொள்ளாதீர்கள். சிந்தித்து அமைதியாகச்செயலாற்றவும். உடல்நலத்தைப் பேணவும். வெளியிடத்துப் பயணம் ஏற்படலாம்.

### கடகம்

வாழ்க்கை தேனுக இனிக்கும். சகலதுறைகளிலும் நல்ல மாறுதல்கள் உருவாகும். பிரிந்தவர்கள் மீண்டும் இணைவதற்கு இடமுண்டு. உறவினர்கள் வருகை உற்சாகம் நிரம்பியதாக இருக்கும். எதிலும் தூய்மையை விரும்புவீர்கள்.

### சிங்கம்

அரச பயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். அதிக நம்பிக்கைமூலம் ஆபத்துக்கு இடமுண்டு. மறைமுக எதிரிகளின் விஷமத்தனங்களில் ஈடுபடுவீர்கள்.

### கன்னி

இறை வழிபாடு மேலிடும். இதயத்தில் அமைதியும் ஏற்படும். முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் ஆதரவு தருவார். பிதாவழிச் சுகம் உண்டு. குடும்பம் வளம் நிறைந்ததாகக் காணப்படும்.

### துலாம்

புதிய தொழில் குறித்துச் சிந்தனை உருவாகும். கடமையாற்றும் இடந்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும் சிலருக்கு வெளியூர் பயணத்திற்கு இடமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சியும் வாகன நலனுடன் வரவிலும் திருப்தி காணப்படும்.

### விருச்சிகம்

பொருளாதாரநிலை சீரடையம். துள்ளிவரும் வெள்ளிப் பணம் உங்கள் வாழ்க்கையைச் சோபிதமடையச் செய்யும். ஒரு பெண்ணின்மூலம் அதிக ஆதரவு கிடைக்கலாம். வெளியூரிலிருந்து செய்தியும் கிடைக்கும்.

### தனுசு

ஏமாற்றத்தின் தாக்குதல் உங்களுக்கு வேதனையைத் தரலாம். குடும்பத்தில் சிறிய பூசல் தலைதூக்கும். தனிவழிப்பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும். வாழ்க்கையே சுமையாகத் தோன்றும். செலவினங்கள் உச்சக்கட்டத்தை அடையும்.

### மகரம்

குடும்பத்தில் சுகக் குறைவு தென்படலாம். அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். முன்னேற்றத்தில் முட்டுக்கட்டை தோன்றும். சிலருக்கு உடல்நலம் பாதிக்கப்படலாம்.

### கும்பம்

எண்ணம்போல் வாழ்வு மலரும். சமூகத்தில் வாழ்வு உயரும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமுண்டு. நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள். அமைதி சிறப்புத் தரும்.

### மீனம்

சிந்தனை அலைகள் மோதும். செய்தொழிலில் பதற்றநிலை தென்படும். அவசரமுடிவின் மூலம் குறைகேட்க நேரிடும். கொள்கையில் கோணலுடன் கோபமும் உண்டாகும். பல வழிகளிலும் பணம் செலவாகும்.

க .வே. ரவீந்திரன்


## 31-வதுநாள் நினைவஞ்சலி

### திருமதி சண்முகம் செல்லம்மா



தாயின் மடியில்:
21-6-1919

தாயக மண்ணில்:
19-11-1985

இல்லத்தின் ஒளி விளக்காய் துலங்கி எம்மையெல்லாம் வழி நடத்திய எமது இதய தெய்வமே, நீங்கள் மறைந்து 31-வது நாளை நினைவு கூருபவர்கள்:

அன்புக்கணவன் சி. சண்முகம் [ஓய்வுபெற்ற கணக்குப் பரிசோதகர்], அருமை மகன் ச. புஸ்பநாதன் B.Sc. [நைஜீரியா], அன்பு மருமகன் இ. இராமச்சந்திரன் [எஞ்சினியர்], அன்பு மக்கள் இ. இராஜேஸ்வரி, ச. லோகேஸ்வரி [ஏயர் லங்கா], அன்பு பேரப்பிள்ளைகள் இ. இரஜந்தி, இ. இரமாவித்யா.

● அன்னாரின் மரணச்சடங்கின் போது, நேரில் வருகை தந்தவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும், மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சையளித்த டாக்டர்கள், ஆஸ்பத்திரி ஊழியர்கள், மற்றும்உதவிகள் செய்தவர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

கோயிற் சந்தையடி, துன்னாலை தெற்கு,
கரவெட்டி. 2317



## 31வது நாள் நினைவஞ்சலி

### திரு. கதிரவேலு துரைஐயா
(Retired Police Sergeant)

அன்னைமடியில்:
07-09-1908

ஆண்டவன் அழைப்பில்:
13-11-1985



எங்கள் குடும்பத் [illegible]! காலமெல்லாம் எங்களுகக்கு வழிகாட்டியாக இருந்தீர்களே, காலன் உங்களை பறித்தானே, நீங்கள் சென்றாலும் நீங்கள் விட்டுச்சென்ற பாசம் எங்களைவிட்டு நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்.

உங்கள்
மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

குறிப்பு: அன்னாரின் மரணச்சடங்குகளில் கலந்தும், உதவிகள் செய்தும், ஆறுதல் சொல்லிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி.
2364


## நூல் கட்டமைப்பு.,.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும். இந்தக் கைங்கரியத்திற்கு மக்களினதும் கலைஞரினதும் தங்குதடையற்ற ஆதரவு கோரப்படுகிறது'' என 'அமுதலிங்கம் ஆராமையுடனும் பணிவுடனும் வேண்டிக் கொண்டார். நெருக்கடியான காலநேரமாக இருந்தபோதிலும் விழா மண்டபம் கலாரசிகர்களால் நிரம்பிஇருந்தமை குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

# மினித்திரை மான்மியம்

[முன்தொடர்ச்சி]

''அப்புத்துரை, இது நல்ல மினித்திரை
எத்தினை மினித்திரை இருக்குது தெரியுமோ
அகலத் திரைகளும் அகன்று போக
வெள்ளித் திரைகளும் விலகிக் கொள்ள
மின்னி மின்னிப் பூச்சிகள் போல
மினித்திரை தானே எங்கும் மினுங்குது
சினிமாஸ் கேப்பிலை ரென் கொமாண்ட்மென்சை
றீகலில் பார்த்த மாதிரி வருமே?
உண்மையைச் சொன்னால் மினித்திரை வந்து
கண்ணைக் கெடுக்குது. ஓமோ இல்லையோ?
அந்த நாளிலை ஒரு படம் பார்க்க,
அப்பா முகத்தை அம்மா பார்க்க...
அண்ணா முதுகிலை தம்பி ஒளிக்க...
இப்பிடி எல்லே அனுமதி கிடைச்சுது.
எப்பவும் இருந்து விட்டுத் தானே
அனுமதி கிடைக்கும். இப்ப என்றால்
எங்கையும் ஆரும் எதையும் பார்க்கலாம்
இங்கை தான் இருக்குது தவறு, தியேட்டரில்
'அடல்ற்ஸ் ஓண்லி' என்றால் ஆர்தான் விடுவான்
சின்னப் பொடியளை. என்ன அப்புத்துரை''
என்கிறார் சட்டத்தரணி சின்னத்துரை.
''உந்தக் கதையை விடுங்கோ புறொக்ரர்
அந்த நாளிலை எல்லாம் திறமே?
புதுப் படமொன்று வருகிற தென்றால்
வகுப்பு முழுதும் தியேட்டரில் இருக்கும்
மொணிற்றரும் டாப்புமே வகுப்பில் இருக்கும்!
[நாங்கள் ஒன்றாய்ப் படிச்ச நாங்கள்]
வகுப்பைக் குழப்பி... வசுவிலை ஏறி...
வழியிலை வாத்திமாருக் கொளிச்சு...
கியுவிலை நின்று... சேட்டைக் கிழிச்சு...
ரிக்கற் இல்லாமைத் திரும்பியும் வந்து...
இப்பிடி எத்தினை சீரழிவப்பா...
இப்ப அப்பிடியே சட்டத்தரணி?''
ஆத்திரப் படுகிறார் அப்புத்துரையர்.
''ஆத்திரப் படாமற் கேளும் அப்புத்துரையர்.
மாற்றம் எப்பிடியும் வரத்தான் செய்யும்
அப்பிடி மாற்றம் வருகிற பொழுது
இப்பிடிச் சண்டைகள் வரத்தான் செய்யும்
வாத்தியார் சொன்னதும் வலுத்த உண்மை
மினித்திரை வந்தது வந்தது தானே!
சனித்திரை என்று சனங்கள் ஏசாமல்
பொறுப்புடன் நடந்தால் பொதுவர் போற்றுவார்
மினித் திரை கண்ணுக்குதவாது... இது மெய்
அடிக்கடி பார்த்துக் கண்ணைக் கெடுப்பதும்
அவரவர் தவறுதான் அப்புத்துரை நீ
நல்ல படமாய் போட்டுக் காட்டும்''
''வல்லவனுக்கு வல்லவன் இன்று
நல்லவன் வாழ்வான் நாளை''
''அப்புத்துரை
எல்லாருந் தான் வாழ வேண்டும்
கேந்திப் படங்கள் வேண்டாம் அந்தக்
காந்திப் படத்தையும் காட்டலாந் தானே.
ஆங்கிலப் படந்தான் அசல் படம். இப்பிடி
நாங்கள் மூன்று பேர் கதைச்ச படியால்
கலகம் பிறந்தது ஞாயமும் பிறந்தது''
''வலு சந்தோசம் வணக்கம்''
''அப்புத்துரை
படத்தை முடிச்ச மாதிரி முடிக்கிறீர்
வணக்கம்'' இப்ப மூவரும் இணக்கம்
''மூவரும் என்ன யாவரும் இணக்கம்.''

— சத்தியசீலன்

## ஒரு கடிதம்

திராவிட இயக்கப் பெரியார் வரலாற்றினை எழுதிய கருணானந்தமும் பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வை இலக்கியமாக்கிய மறைமலையானும் குறிப்பிடும் ஈழத்துச் சிவானந்தனும் புலவர் ஈழத்துச் சிவானந்தனும் ஒருவரா என்று தங்களை நான் கேட்ட கேள்விக்கு 10-11-85 வாரமலரில் விளக்கமான பதில்தந்ததோடு யாழ்ப்பாணத்தில் இருக்கும் புலவர் ஈழத்துச் சிவானந்ததனின் ஆற்றலையும், ஆக்கங்களையும் தெரியப்படுத்தினீர்கள். இதற்கு எனது நன்றிகள். இவ்வித பணியை வெள்ளிவிழாக்கண்ட ஈழநாடு தொடர்ந்தும் செய்ய வேண்டுகிறேன்.

ந. கமலநாதன்
மக்கள் வங்கி
யாழ். பிரதான வீதி.


## தபால் மூலம் ஆங்கிலக் கல்வி (தமிழில்)

கடும்வேலை அல்லது பிரயாண அபாயம் முதலியவற்றால் வகுப்புகளுக்குச் சென்று கற்பது கஷ்டமா?

கவலையை விடுங்கள்

வீட்டில் இருந்தவாறே சொகுசாக ஓய்வுநேரங்களில் ஆங்கிலம் கற்றுப் பயனடையுங்கள்.

மாணவர்கள், வேலைசெய்வோர், வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள் அனைவருக்கும் ஏற்றது.

முழுப்பயிற்சிக்கும் ரூ. 200/- மட்டுமே

இலவச விபரக்கொத்திற்கும் விண்ணப்பப் பத்திரத்திற்கும் தயவுசெய்து எழுதவும்:

CANTABIA INSTITUTE
(Shoot of Oxonia, Colombo)
21, Main Steet,
JAFFNA.
Phone: 24201

## கடலும் அலையும் -- 5

ஆயிரம் ரூபா உழைப்பவன் சில ரூபாக்களைச் சேமித்து மகிழ்ச்சியாயிருக்க - பல ஆயிரம் உழைப்பவன் தொடர்ந்தும் கடனாளியாகக் கவலைப் படுவதை நாம் காண்கிறோம்.

# நிலையான தீர்வுகளுக்கு வன்முறை பொருந்துமா?

உறவின் நன்மையால் விளைவது இன்பவுணர்வு. உறவினது தீமையால் விளைவது துன்பவுணர்வு. இந்த இரண்டின் சுவையுள்ளும் உயிரின உணர்வுகள் அனைத்தையும் அடக்கலாம், வாழ்வியலுக்குரிய ஒன்பான் சுவையையும், உலகியலையும்; அறம்-மறம் இவற்றையும் உள்ளடக்கலாம். பண்டைய நூற்பரப்புப் பகுப்பான அகத்தில் இன்பவுணர்வு - துன்பவுணர்வு; புறத்தில் இன்பவுணர்வு- துன்பவுணர்வு. இவை இரண்டினுள்ளும் இரண்டும் உண்டு. எனினும் அகத்தில் பெரும் பகுதி இன்பம். புறத்தில் பெரும் பகுதி துன்பம். இன்பம் துன்பம் இரண்டாலும் அமைந்ததே வாழ்வு. உணர்வுகள் அவரவர் பக்குவத்திற்கேற்பவே மேலோங்குகின்றன. உணர்வால் ஏற்படுந் தாக்கம் துன்பத்தோடு ஒன்றி, அறிவுணர்வுக்கு அப்பாற் சென்று, வன்முறைக்கும் தீர்வுக்கும் வித்திடும். உணர்வு மேலீட்டாலும் வன்முறை நிகழும். தீயார் சொற் கேட்டல் முதலானவற்றாலும் வன்முறை நிகழும். முள்ளை எடுப்பதற்கு முள் வேண்டும். இது போன்று வன்முறையைப் போக்க நாமும் வன்முறையைக் கடைப் பிடிப்பது பொருந்துமா?

இன்ப துன்பத்திற்குத் துணையாக வல்லான் தம்பி. ஆதலால், ''தம்பியுள்ளான் சண்டைக்கஞ்சான்'' என்கிறது முதுமொழி. சண்டைக்குப் போ என்று கூறவில்லை. கூட்டுறவின் உயர்வை, சகோதரத்துவ இணைப்பை, தார்மீகப் பலத்தை [Moral Strength] உணர்த்தவந்த தொடர். பொருள் என்ற பூதம் இந்த உறவுகளைக் கூட விழுங்கி விடுகின்றது.

அண்ணனுக்கு அதிக பொருள் நீதியற்ற முறையில் சந்தர்ப்ப வசமாகக் கிடைத்து விடுகிறது. இதனாற் தம்பி கோபமடைகிறான். தன் நண்பர்களுடன் ஆலோசனை செய்கிறான். அவர்களும், நீதியற்ற முறையில் உனக்குரியவற்றைக் கவர்ந்த அவனுக்கு அது சோராமற் செய்து விடு என ஆலோசனை வழங்குகிறார்கள். உடைமைகளை அழித்து விடுவதற்கான திட்டம் தீட்டுகிறான் தம்பி. ஆனால் அண்ணனது தொடாபு தொடர்ந்து இருந்ததால் மெல்ல, மெல்ல வஞ்சினம் மாறித் தான் ஏமாற்றப்பட்டதையே மறந்து விடுகின்றான் -

இல்லைத் தன்னைத் தானே சமாதானப் படுத்திக்கொள்கிறான். பாசத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான். இந்த வேளையில் ஆலோசனை வழங்கிய நண்பர்களும் அயலில் இல்லை. ஆதலால் எல்லாம் சகஜமாகி விடுகிறது. மீண்டும் 'திரு அற்ற' அந்த நண்பர்களின் சேர்க்கை வந்தடைகின்றது. இவனுக்கும் ஓரளவு பொருளாதாரக் கஷ்டம் இருந்ததால்அவர்களதுஆலோசனையின் பேரில் தனக்குரிய பங்கை அண்ணனிடம் கோருகின்றான் அண்ணன் மசியவில்லை. நண்பர்களுடன் சேர்ந்து கொண்ட தம்பி; அண்ணனிடமிருந்த உடைமைகளுக்குத் தீ வைக்கின்றான்.

**நாள்களின்வளர்ச்சியில்குடும்பச் சண்டை கோட்டேறுகிறது.** தம்பியிடம் இருந்த சொத்தும் கரைகிறது. ஆத்திரம் அடைந்த தம்பி அண்ணனைக் கொலை செய்து விடுகிறான். இவனும் ஆயுட் தண்டனை பெறுகிறான். இரு குடும்பங்களும் நடுத் தெருவில் நிற்கின்றன. ஏதோ அண்ணன் தானே எடுத்தான் எனத் தம்பி விட்டிருந்தால். அல்லது தம்பிக்குரியதை அண்ணன் கொடுத்திருந்தால் இரு குடும்பங்களும் வாழ்ந்திருக்கும். அண்ணன் அல்லது தம்பி இருவரில் ஒருவருக்கென்றாலும் தக்கார் சேர்க்கை இருந்திருந்தால் இருவருமே வாழ்ந்திருக்கலாமல்லவா?

நல்லதைக் காட்டிலும் தீயன விரைவில் வளரும். ஆதலாலே நல்லன குறைந்தும் தீயன மிகுந்தும்உள்ளன. இதே போன்று தக்கார் தகவிலாரைக் காட்டிலும் குறைவான எண்ணிக்கையுடையோராயுள்ளனர். இதனாலேயே பெறுபேறுகள் அதாவது தீர்வுகள்வன்முறைக்கு-வன்முறை என்று வளர்ந்து நடுத்தெருவில் விட்டிருக்கின்றன. தக்காரொருவனில் இன்னாதன செய்தவரையும் இனியன செய்து தம் சால்பு வெளிப்பட நிற்பர்.

''இன்னா செய் தார்க்கும்
இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்''

என்ற இந்த அறக் கட்டளையை [Moral Values] மனதிற் கொண்டு வன்முறையை வெல்ல எண்ணும் அதே வேளையில் வன்முறை செய்யும் கயவரை வன்முறையால் வெல்லப் பணிக்கிறதே! இன்னோரிடத்தில்; ஏன்?

[வளரும்]

**வட்டூர் எம். என். கடம்பேசுவரன்**

## இணுவையூரில் ஒரு சேவகி



விளக்கு இல்லாத வீடு வீடாக இருக்கமுடியாது. அது அழகுபெற முடியாது. அது நிறைவுபெற முடியாது.

பெண் இல்லாத வீடு இல்லறம் விளங்கும் இடமாக இருக்க முடியாது. அங்கே நிறைவு இருக்காது. பெண் இல்லக விளக்கு ஆவாள். இல்லக விளக்கில் இருந்து அன்பு என்னும் ஒளி பிறக்கிறது. அந்த ஒளி பண்பு, தியாகம், பொறை என்னும் நன்மைகளை உலகுக்குக் கொடுக்கிறது. பெண் இல்லாத மங்கல நிகழ்ச்சி எதுவும் இல்லை. ''பெண்ணிற் பெருந்தக்கயாவுள'' என்று கேட்கிறார் வள்ளுவர்.

இத்தகைய பெருமைமிக்க பெண்குலத்தில் தோன்றிய இணுவையூர் திருமதி சின்னையா தங்கச்சியம்மா தமது அன்பும் பண்பும் நிறைந்த சேவையினால் அப்குதி மக்களினால் பெரிதும் நேசிக்கப்பட்டார். 'அம்மம்மா' என்று சிறுவர்களாலும் 'தங்கச்சி முத்தம்மா' என்று மாதர்களாலும் அன்பொழுக அழைக்கப்பட்டுவந்த இந்த அம்மையார் இறுதிவரை சகல செல்வங்களுடனும் வாழ்ந்தவர்.

இப்பகுதியில் உத்தியோகப் பற்றற்ற மருத்துவமாதாகத் தம்மை அர்ப்பணித்து மக்களுக்கு மகத்தான சேவையை இத்துறையில் பல ஆண்டுகள் புரிந்து பலரின் பண்டையும் பெற்ற இவர் தமது சேவையில் உற்றார்என்றோ, மற்றார் என்றோ வேறுபாடின்றி, 'முடியாது' என்ற பேச்சுக்கே இடமின்றி, காலநேரம் பாராது கடமையே பெரிதெனஎண்ணி **அபயக்குரல்களுக்குச் செவி சாய்த்து வாழ்ந்தார்.**

ஊரடங்கு நேரத்திலும் வைத்தியசாலைக்கு மக்கள் செல்லமுடியாத காலங்களிலும், ஏமத்திலும் சாமத்திலும் மகப்பேற்றில் துயருறுபவர்களுக்குக் கைகொடுத்துதவும் டாக்டராகவே இவர் பயன்பட்டார்.

ஊதியமின்றி உபகாரம் செய்வதை இக்காலத்தில் காண்பதரிது, ஆனால் தங்கச்சி முத்தக்கா இறுதிவரை பிரதிபலன் கருதாமல் அன்பினால் சேவையாற்றினார். தனிமரமாய் அம்மம்மா ஆற்றிய குடும்பப்பணிகளையும், அயலவர்க்கான தொண்டுகளையும் அப்பகுதி மாதர்குலம் மறக்க முடியாது.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோவிலும், இணுவில் சிவகாமி அம்பாள்கோவிலும் என்றும் இவரின் தரிசன ஆலயங்களாக இருந்தன. இத்தெய்வங்களின் அருளே தன் சேவைக்கு காரணம் என்ற தன் நம்பிக்கை கொண்டவராக வாழ்ந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிநிற்கின்றோம்.

**தேவி**
**இணுவில்.**

## மார்கழிக்குப்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

என்பது சொல்லாமலே விளங்கும். உயிர்களை இத்தத்துவங்களாற் செயற்படுத்தும்போது தத்துவங்கள் அறிவித்தபடியே உயிர்கள் அறிந்து அவைகள் செயற்படுத்தப் பட்டபடியே செயற்படுவன. இதனை,உயிர்கள் நித்திரை செய்யும்போது ஒன்றையும் அறியாமலும் செயற்படாமலும் இருப்பது நிரூபிக்கும். ஆகவே தத்துவங்கள் உயிர்களுக்குக் கட்டுப்பட்டவைகள் அல்ல. உயிர்கள் மேலேறுவதற்கான வழிவகைகளைக் கேட்டு அல்லது கற்று அதன் வழி நிற்க இறைவன் அவ்வுயிரினிடமாகக் கோயில் கொண்டு அதனை வழி நடத்துவன். இதனை,

''உள்ளம் பெருங் கோவில்
ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்
கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச்
சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா
மணிவிளக்கே''

என்கின்ற திருமந்திரமும்

''சகமலாத டிமையில்லை தான
லாளுல்துணையுமில்லை
நகமெலாந் தேயக்கையால்
நாண் மலர் தொழுது தூவி
முகமெலாங் கண்ணீர் மல்க
முன்டணிந் தேத்தும் தொண்
டர்
அகமலாற் கோயிலில்லை ஐயன்
ஐயாற னார்க்கே''

என்கின்ற அப்பர் பெருமான் தேவாரமும் அறியப்படுத்துகின்றன. இவற்றால் புலன்கள் அசுத்த நிலையினின்று சுத்த நிலையை எய்தி, தொழிலற்று, கணவன் பின் மனைவி செல்வது போல உயிர்கள் பின் **செல்வன.**

## பிள்ளையார்கதை



நடுக் கடலில் சென்றாலும் நாய்க்கு நக்குத் தண்ணிதான் என்றபடி கடனாளியாயும் தரித்திரனாகவும் இருக்கவேண்டியவன் பெருந் தொகைப் பணம் இருந்த போதும் துன்புறுவது புதுமையல்ல. ஆனால் குறைந்த வருமான முள்ளவன் மகிழ்ச்சியுடனும் சிறுசேமிப்பால் பெருந்தொகை செல்வத்தை அடைந்து விளங்குவதும் தான் பலருக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணுகின்றது. இப்படியான ஆச்சரியமான நிகழ்ச்சிகளுக்கு உண்மைக் காரணம் தெய்வ அருள் என்பதை உணர வேண்டும் என்று கூறுகின்றது பிள்ளையார் கதை.

இலக்கண சுந்தரி பிள்ளையார் கதை விரதமனுட்டித்து விநாயகர் அருள் பெற்ற பின் விக்கிரமாதித்தன் மிகுந்த களைப்புடனும் பெரும் படையுடன் ஒளவை இருந்த இடத்தை அடைந்தான். ஒளவையின் ஆணைப்படிகுருமொழியை அநுசரித்தும் சீடரின் பணிவுடன் பிள்ளையாரின் நிவேதனமான அப்பமும் நீரும் அரசர்க்குக் கொடுத்தாள் இலக்கண சுந்தரி அவள் கொடுத்த அப்பமும் நீரும் அரசனுக்கும் பெரும் படைக்கும் திருப்தி யளித்தது.

அறுசுவை உணவினால் நீங்காத நீர் வேட்கை ஒருவேளை நீரால் தீர்வது போல பெரும் தொகை உணவால் ஏற்பட வேண்டிய களை நீக்கமும் உற்சாகமும் இலக்கண சுந்தரி கொடுத்த அப்பத்தாலும் நீராலுமே அரசனுக்கும் படைக்கும் ஏற்பட்டன.

— அருளாளன்

COMMERCE D Y CLASS
ஆரம்பம்: 16-12-85 காலை 8 மணி
(வாரத்தில் 20 வகுப்புகளிற்கு கூடுதலான வகுப்புக்கள் நடைபெறும்)
விபரங்கட்கு:
New Master Institute,
BMC LANE, JAFFNA.

மேற்கு ஜேர்மனி,
பிரான்ஸ், இத்தாலி
ஆகிய நாடுகளுக்கு உங்களை எமது பிரதிநிதி இங்கிருந்து
Decemb r 26-ந் திகதி
அழைத்துச்செல்வார்.
மற்றும்
பாஸ்போட், போண்ட், விசா
என்பவற்றுக்கும்
டொக, அபுதாபி
செல்ல விரும்புபவர்களும்
உடன் தொடர்பு கொள்ளவும்:
லிப்ரூஸ் லிமிட்டெட்
R. G. கட்டடம்,
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
NO. 60, SEA BEACH ROAD,
PETTAH.
TEL. NO. 29148

86 A/L Day Class
3-ம் பிரிவு
ஆரம்பம்: 16-12-85 திங்கள் காலை 11 மணி
3-ம் பிரிவு
86 A/L Weekend Class
ஆரம்ப :  15-12-85 ஞாயிறு காலை 9-30 மணி
Paper Class
1-ம் பிரிவு
ஆரம்பம்: 22-12-85 ஞாயிறு நண்பகல் 12-00 மணி
விபரங்கட்கு:
NEW MASTER INSTITUTE
BMC L NE, JAFFNA.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் ரதிவாச் வேக்ஸ் அன்ட் ஸ்ரோஸ் ஸ்தாபனத்தில் 1981-ம், 1982-ம் 1983-ம் ஆண்டுகளில் எம்மிடம் திருத்தக்கொடுத்து எடுக்கப்படாத சகல மணிக்கூடுகளையும் 1986-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதிக்கு முன்னர் ரசீத்துடன் வந்து உடன் பெற்றுக்கொள்ளவும்.

[2265]

## முக்கிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி 4ம் கந்தாயம்-1985

1985ம் ஆண்டு 4ம் கந்தாயத்திற்கானசோலைவரிப்பணம் 31-12-85ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்றப் பணியகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். இத்திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் விபரங்களின் படி வெலியாத்துப்பணம் அறவிடப்படும்.

வெற்றுக்காணிகள், குடியிருப்புக் காணிகள் — 15%

இவையல்லாத காணிகள் — 20%

சாசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் ''யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளரின்'' சார்பில் அஞ்சல் சேவையில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல்வேண்டும். அப்படியாக அனுப்பப்படும்போது வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கம், வீதியின் பெயர், வட்டாரத்தின் இலக்கம் முதலிய விடரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

சி. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12-12-85

2366

### உஷாமினி

10-80, 2-30, 4-45, 6-45
KILL AND BE KILLED
தொடங்கி முடியும் வரை மிக விறுவிறுப்பான கராட்டி சண்டைப்படம்.

### எம்பயர்

7 அடித்திரையில்
10-30, 2-30, 6-30. 9-15
விசு, கார்திக்
**கெட்டி மேளம்**

### லிடோ சினிமா

10-30, 2-30, 4-30, 6-30
**தனி மரம்**
13 முதல்
**JAWS-III**

### வெலிங்டன்

10-30, 2-30, 6-30
சிவகுமார்-பிரமிளா நடித்த பாலச்சந்தரின்
**அரங்கேற்றம்**
17-ந் திகதி முதல்
TEN BROTHERS OF SHAOLIN TEMPLE
(Latest Karate)

## இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**நீங்கள் ஒரு கணக்காளர் ஆக!**

க. பொ. த. சாதாரண பரீட்சை 5 பாடங்களில் விசேட சித்தியுடன் I. C. M. A. பகுதி A பரீட்சைக்கு விதி விலக்கு தரும் புதிய பரீட்சை.

## A. A T (London)

ஆரம்பம்:- 21-12-85. N. C. E. பரீட்சை எடுக்கும் மாணவர்களில் வசதிக்கேற்றவாறு A.A.T. வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

G. C. E. (A/L) இ ண்டு பாடங்கள் விசேட சித்தியுடன் I. C. M. A. Section A Stream II வகுப்புகள் ஆரம்பம்.

## North Ceylon Technical Institute

No. 14, St. Peters Lane,
Hospital Road,
(Opp.) O. L. R. Church,
JAFFNA T.phone: 24355

## 43-ம் நாள் நினைவஞ்சலி
### அமரர் திரு. சி. சதாசிவம்

(இளைப்பாறிய புகையிரத பிரதம பாதுகாவலர்)

தோற்றம்:
19- 7- 1925

மறைவு:
3- 11- 1985



எங்கள் நெஞ்சை விட்டகலா சுடர் ஒளியே, அன்பின் உறைவிடமே, பண்பின் சிகரமே, பாசத்தின் திருவுருவே, சொல்லாமல் மின்னலென மறைந்து எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட எங்கள் குடும்ப ஒளி விளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தா வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

அன்பு மனைவி, மக்கள், மருமகன், சகோதரர், மைத்துனர், அன்புப் பேரன்.

[2393]


## ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி
### திரு. சின்னப்பு சுப்பிரமணியம்

(அதிபர்)
(வேரப்பிட்டி, சங்கானை, கோண்டாவில், றத்தோட்டை, பலாலி.

மலர்வு:
1922-12-03

உதிர்வு:
1980-12-11

திதி:
1985-12-15



அன்பாலும் பண்பாலும் எம்குடும்பத்துக்கு ஒளியூட்டிய அன்புத்தெய்வமே. காலங்கள் மாறினும், ஆண்டுகள் கடந்தாலும் உங்கள் நினைவு உயிருள்ள வரை எம் நெஞ்சை விட்டகலாது.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

பிரபை மஹால்,
உரும்பராய்.

2398

## யாழ் நகரில் 'பெப்சி"

**16-12-85** திங்கள் முதல் உலகப்புகழ் பெற்ற

### "பெப்சி கோலா"வை

தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்துவதிலே பெருமையடைகிறார்கள்

### "சிவா ஸ்ரோர்ஸ்" ஸ்தாபனத்தார்

திங்கட்கிழமை முற்பகல் 10-58 முதல் 12-32 வரையுள்ள சுபவேளையில்

179, சின்னக்கடை வீதியிலுள்ள

### "சிவா ஸ்ரோர்ஸ்" ஸ்தாபனத்தில்

அறிமுகம் செய்து வைக்கப்படும்.

சிவா ஸ்ரோர்ஸ்
யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்
தொலைபேசி: 22072

2386

## O/L புதிய வகுப்புக்கள் 1986 பிரிவு II

ஆரம்பம்: 16-12-85 திங்கள் காலை 8 மணி

## A/L 1986-ம் ஆண்டுக்கான மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்: 16-12-1985 (திங்கள்) காலை 8 மணி

யாழ் நகரில் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற தன்னிகரற்ற நிறுவனம்

## நிரு ரியூசன் சென்றர்

கோண்டாவில், கொக்குவில்.

### விஞ்ஞானம்
### O/L புதிய வகுப்புக்கள் 1986

ஆரம்பமாகிவிட்டன.

ஆசிரியர்: R. செல்வவடிவேல்

## DIPLOMA IN TECHNICAL COURSE

ஆரம்பம்: 23-12-1985.
உடன் பதிவுசெய்து கொள்ளவும்.

Diploma in Motor Mechanism
[மோட்டார் மெக்கானிசம்]

Diploma in Welding
[வெல்டிங்]

Diploma in Plumbing
[பிளம்பிங்]

Diploma in Air-Condition and Refrigeration
[குளிரூட்டலும் பாதுகாத்தலும்]

Radio and T. V. Electronics with Practicals
[வானொலியும் T. V. யும்]

(Servising and Repairing Course)

Watch Repairing Course
[வாட்ச் றிபெயரிங்]

## North Ceylon Technical Institute

14, St. PETERS LANE,
(Opp. O. L. R. CHURCH)
HOSPITAL ROAD, JAFFNA.
Telephone: 24355

# ஈழநாடு
## வார மலர்

THE EELANADU VARAMALAR



உ
சிவமயம்

**சற்குணராஜா அன் பிறதர்ஸ்**

**மகத்தான திறப்புவிழா**



இன்று 15-12-1985 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-09 தொடக்கம் 12-14 வரையுள்ள சுடவேளையில்

**சற்குணராஜா அன் பிறதர்ஸ்**

என்னும் ஸ்தாபனத்தை
660, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணத்தில்
ஆரம்பிக்சவுள்ளோம்.

அவ்வமையம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேம். எம்மிடம்

- ✶ கோழித்தீன் ★ முட்டை
- ✶ கோழி இறைச்சி ✶ மருந்துவகைகள்

மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்கள்:

**சற்குணராஜா அன் பிறதர்ஸ்**

660, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் — ஸ்ரேஷன் றேட், பிரம்படி, கொக்குவில்.


## மரண அறிவித்தல்
### திருமதி சிவகாமிப்பிள்ளை மார்க்கண்டு

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த காலஞ் சென்ற மார்க்கண்டு [ஆசிரியரின்] அன்பு மனைவி சிவகாமிப் பிள்ளை காலமானுர். இவர் திலகநாதன் [தபால் அதிபர் கொழுப்பு], சரோஜினிதேவி, கருணைநாதன் [கிராம சேவை அலுவலர், நீர்வேலி], சந்திராதேவி, சகுந்தலாதேவி, குலேந்திரநாதன் [சிறைச்சாலைத் திணைக்களம் யாழ்ப்பாணம்], அம்பிகாதேவி [இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி நா. திலகநாதன் [ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி], கங்காதரன் [உதவி வைத்தியர், புத்தளம்[, க. சியாமளா விக்கினேஸ்வரன் [பயிற்செய்கை உத்தியோகத்தர், உரும்பிராய்] ஆகியோரின் மாமியார் ஆவர். அன்னுரின் ஈமக்கிரியைகள் 15-12-85 இன்று ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் மயானத்தில் நடைபெறும்.

தகவல் தருபவர்: மா. கருணைநாதன், கிராமசேவகர், நீர்வேலி.
[2401]

## மரண அறிவித்தல்
### திரு. சங்கரப்பிள்ளை சிற்றம்பலம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவரும் (முன்னைநாள் இறைவரித்திணைக்கள ஆணையாளரும்) காலஞ்சென்ற (றங்கூன்) சங்கரப்பிள்ளை தம்பதியின் மகன் ச. சிற்றம்பலம் 11ந்திகதி கொழும்பில் காலமானுர். இவர் சௌந்தரியின் அன்புக்கணவரும் (மாலைதீவு வைத்திய கலாநிதி). ரதி, கலாநிதி மாயா, (அமெரிக்கன் எக்ஸ்பிறஸ்) இந்திரஜித் ஆகியோரின் அன்புத்தந்தையும், திறைசேரி சதிர்காமநாதன், மல்லாகம் திருமதி அன்னபூரணி மயில்வாகனம், திருமதி சிவகாமசுந்தரி பரஞ்சோதி ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார் அன்னுரின் விருப்பத்திற்கிணங்க அவரின் சொந்த ஊரான மல்லாகத்தில் 12-12-85 அன்று ஈமக்கிரியைகள் நடைபெற்றன

உற்றூர் உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். ஈமக்கிரியையின்போது பங்கு பற்றியவர்களுக்கும் உதவிபுரிர்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

தகவல்: **வ. க. மயில்வாகனம்**
குமரேசர் வளவு,
மல்லாகம்.
[2390]

**விநாயகவிரத**

## லட்சார்ச்சனை பூர்த்திவிழா

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் தெற்கு - பழைய வீதி அருள்மிகு வீரபத்திரர் கோவிலில் விநாயக விரத லட்சார்ச்சனைப் பூர்த்தியும் பெருங்கதைப் படிப்பும் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பூர்த்தி விழாவை முன்னிட்டு விநாயகப்பெருமானுக்கு விஷேட அபிஷேகமும், பத்திர - புஷ்ப அர்ச்சனைகளும் திருவிழாப் பூசையும் இடம் பெறுகின்றன.

## கோட்டைமீது தாக்குதல்
### லங்காபுவத் செய்தி!

[கொழும்பு]

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டதாக லங்கா புவத் அறிவித்துள்ளது.

இத் தாக்குதல் நேற்று முன்தினம் இடம் பெற்றதாகவும் கோட்டையைச் சுற்றிவர 20 குண்டுகள் வெடிக்க வைக்சப்பட்டதுடன், இயந்திரத் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் எதுவித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது,

## தகுதிகாண் சான்றிதழ்

(சுண்டிக்குளி)

யாழ்ப்பாணத்தில் வர்த்தக வாகனங்களுக்கு (பஸ், மினிபஸ், லொறி உட்பட) தகுதிகாண் சான்றிதழ் வழங்குவதற்கு 'பற்றீசியன் இன்ஸ்ரிரியூட்'டும், தெல்லிப்பழை தெல்லி எஞ்சினியேர்ஸ்'ம் அனுமதிக்கப்பட்டு, சான்றிதழ் வழங்குவதற்கு ரூபா 300/- அறவிடுவதற்கும் அனுமதிக்கப்பட்டிருந்தது.

இக்சட்டணமாக இனிமேல் ரூபா 200/- மட்டுமே அறவிடவேண்டுமென்று போக்குவரத்து ஆணையாளர் அறிவித்துள்ளார். இதற்கமைய 200 ரூபாவையே வாகன தகுதிகாண் சான்றிதழை வழங்குவதற்கு கூலியாக பெற முடியும்.

**சிங்களச். . . .**

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சொல் சிங்களத்தில் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது.

க பொ. த. சாதாரணப் பரீட்சை சம்பந்தமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கும் சில குழறுபடிகளுடன் இதுவும் சேர்ந்துள்ளது தமிழ்ப் பரீட்சார்த்திகளைத் திணறவைக்கும் நடவடிக்கையாகும்.

## மரண அறிவித்தல்
### திருமதி கந்தையா பத்தர் நாகம்மா

14-12-85 அறிவித்தலின்படி அன்னுரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லமாகிய வட்டக்கச்சியில் 14-12-85 அன்று சனிக்கிழமை தகனம்செய்யப்பட்டது.

தகவல்:
க. செல்லத்துரை. [2405]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B10036/81. Eelanadu P. O. Box: 49, Telegram, Eelanadu, Telephone: 22389-24126.

## மரண அறிவித்தல்
### திரு. க. ப. இரத்தினையா

வசாவிளான் இளைப்பாறிய ஆசிரியர் க. ப. இரத்தினையா காலமானுர். இவர் செல்லம்மாவின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் கந்தையா, காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்பு மகனும், குணபூசணத்தின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்ற இராசம்மா, அருள் சகோதரி பிரான்சிஸ்கா (சூசையப்பர் மடம் வசாவிளான்), காலஞ்சென்ற தலைமையாசிரியர் பிலிப்புப்பிள்ளை, காலஞ்சென்ற தலைமையாசிரியர் சூசைப்பிள்ளை, அப்புத்துரை, காலஞ்சென்ற முறிவு, நோவு வைத்தியர் இரத்தினசிங்சம், காலஞ்சென்ற தலைமையாசிரியர் சிங்கராசா ஆகியோரது அன்பு மைத்துனருமாவார். அன்னுரது நல்லடக்கம் 15-12- 5 (இன்று) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணியளவில் வசாவிளான் சேமக்காலையில் நடைபெறும். உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: நவம். (2394)

## மரண அறிவித்தல்
### மார்க்கண்டு கனகரத்தினம் இராமச்சந்திரன்

கனகரத்தினம் இராமச்சந்திரன் [கட்டடத்திணைக்களம், யாழ்ப்பாணம்] 14-12-85ல் காலமானுர். இவர் பாலேஸ்வரியின் அன்புக் கணவரும், சல்யாணி உமையாள் [யாழ். பல்கலைக்சழசம், 2-ம் வருட விஞ்ஞானம்] குலசிங்சம், [யாழ்ப்பாணக் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கே. மகாதேவா [U. K.] திருமதி செல்லப்பா அவர்களின் அன்புச் சகோதரருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 15-12-85 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு அன்னுரது இல்லத்தில் நடைபெற்று தசனக்கிரியைகளுக்காக வட்டுக்கோட்டை கொத்துத்துறை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றூர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்**
பழைய ஆஸ்பத்திரி ஒழுங்கை,
வட்டுக்கோட்டை. 2399

## மரண அறிவித்தல்
### பொன்னையா-காராளசிங்கம் (இராசையா)

வேலணை கிழக்கு 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்த இராசையா என்றழைக்கப்படும் பொன்னையா காராளசிங்கம் காலமாகிவிட்டார். இவர் தில்லைவனத்தின் அன்புக்கணவரும், அமிர்தவல்லி, பொன்னம்பலம் [உதவி தடாலதிபர் அஞ்சலகம், யாழ்ப்பாணம்] புவனேஸ்வரி, மரகதவல்லி, பரமேஸ்வரி, இராசேஸ்வரி [கனடா], கணேசலிங்சம் [விசேடசேவை உத்தியோகத்தர், வேலணை] ஆகியோரின் அன்புத்தந்தையும், புளியங்கூடலைச்சேர்ந்த காலஞ்சென்ற இராசரத்தினம், திருமதி சாந்தி பொன்னம்பலம் [தொலைத் தொடர்பு திணைக்களம், யாழ்ப்பாணம்] தேவராசா [வர்த்தகர், மாவத்தசம] விஜயரத்தினம் [நெடுந்தீவு] மார்க்கண்டு [கனடா] ஆகியோரின் அன்பு மாமனும், கா. பொ. தர்மலிங்கம், கா. பொ. சோமசுந்தரம் [சரவணை] ஆகியோரின் அன்புத் தம்பியும், மேகலா, [கனடா] ராதிகா, வசந்தன், ஷர்மிலா, மினுஷா, ரேசன், சித்திரா, வாகீசன், கார்த்திகா, மயூரி [கனடா] ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் வேலணையிலுள்ள அவரது இல்லத்தில் இன்று 15-12-85 [ஞாயிறு] பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெற்று பூதவுடல் தசனக் கிரியைக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
[2403]

## மரண அறிவித்தல்
### வைத்தியநாதர் விசுவலிங்கம்

மேலைக்கரம்பொன் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த வைத்தியநாதர் விசுவலிங்சம் காலமானுர். இவர் பொன்னம்மாவின் அன்புக்கணவரும், நித்தியானந்தன், விஜயராணியின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற பொன்னம்பலம் கண்ணம்மா, சீனித்தம்பி அன்னப்பிள்ளை, வைத்தியநாதர், சரவணமுத்து, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுப்பிரமணியம் (பொறியியலாளர்) தேவாம்பாள் ஆகியோரின் அன்பு மாமனும், சுரேந்திரன், சதீஸ்குமார் சச்சிற்குமார், சுதர்சனி, நக்கீரன், கவிதா, ஆகியோரின் பாட்டனும் ஆவர். அன்னுரின் ஈமக்கிரியைசள் 15-12-85 (இன்று) ஞாயிற்றுக்கிழமை 1-00 மணியளவில் மேலைக்கரம்பொன் மயானத்தில் நடைபெறும் உற்றூர் உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

**வி. நித்தியானந்தன்**
கரம்பொன் மேற்கு. [2402]

## மரண அறிவித்தல்
### குரும்பசிட்டி கதிரேசு செல்லத்துரை
### (முன்னைநாள் கிராம விதானையார் கிராமசேவகர்)

குரும்பசிட்டி முத்துமாரி அம்பாள் முகாமையாளர் மயிலிட்டி தெற்கு கிராம விதானையாரும், கிராமசேவகருமாகிய, சன்மார்க்க சபை போஷகர் கதிரேசு செல்லத்துரை 14-12-85 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு காலமானுர். இவர் நடேஸ்வரியின் அன்புக் கணவரும், ஈஸ்வரபாலன் [இ. போ. ச யாழ்ப்பாணம்] அன்புத் தந்தையும், மகிந்தனின் பேரனுமாவர். அன்னுரின் ஈமச்சடங்குசள் இன்று 15-12-85 ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு குரும்பசிட்டியில் நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றூர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(2408) **செ. ஈஸ்வரபாலன்.**
[மகன்]